# குமாரதேவர் நெஞ்சுவிடு தூது

## (அத்துவித உண்மை உரையுடன்)

பதிப்பு

**இரா. மகாராஜன்**

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

சென்னைப் பல்லைக்கழகம்

## தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல்

மே – 2004.

# குமாரதேவர் நெஞ்சுவிடு தூது

## (அத்துவித உண்மை உரையுடன்)


பதிப்பு

**இரா. மகாராஜன்**

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

சென்னைப் பல்லைக்கழகம்



# தமிழ் இலக்கியத்துறை

**சென்னைப் பல்கலைக்கழகம்**

**சுவடியியல் மற்றும் பதிப்பியல்**

**மே – 2004.**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக அளிக்கப்பட்ட பதிப்பு வரிசை எண்:

**முனைவர் வீ. அரசு**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம்
சென்னை –600 005

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

**குமாரதேவர் நெஞ்சுவிடு தூது** என்னும் பொருண்மையில் அமைந்த தாள் சுவடியைச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயம் பெறுவதற்காகச் **செல்வன் இரா. மகாராஜன்** அவர்கள் எனது மேற் பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவரது சொந்த முயற்சியில் உருவானதுயென்றும் சான்று அளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள்: 31–05–04

**வீ. அரசு**
(மேற்பார்வையாளர்)

*இரா. மகாராஜன்*
ஆய்வாளர்,
சுவடியல் மற்றும் பதிப்பியல்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை–5.

# ஆய்வாளர் உறுதிமொழி

**குமாரதேவர் நெஞ்சுவிடு தூது** என்னும் பொருண்மையில் அமைந்துள்ள தாள் சுவடியைச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயத்திற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை பேராசிரியார் **முனைவர் வீ. அரசு** ஐயா அவர்களின் மேற் பார்வையில் பதிப்புப் பணி செய்து அளிக்கும் இப்பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

இடம் : சென்னை
நாள்: 31 –05–04

**இரா. மகாராஜன்**
(ஆய்வாளர்)

# நன்றியுரை

சுவடியில் பட்டயவகுப்பில் சேர்ந்து பயில வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ் இலக்கியத் துறைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குமார தேவர் நெஞ்சு விடுதூது** என்றும் தலைப்பில் இப்பதிப்பு நூல் உருவாக நெறியாளராக இருந்து நெறிப்படுத்திய சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் **வீ.அரசு** அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமையுடையேன். நூலில் எழுந்த சந்தேகங்களைத் தெளிவுப்படுத்திய புலவர். **ப.வெ. நாகராஜன்** அவர்களுக்கும் வகுப்பில் சுவடியியல் மற்றும் பதிப்பியல் தொடர்பான செய்திகளை வழங்கிய விரிவுரையாளர் **முனைவர் ய.மணிகண்டன்** அவர்களுக்கும், விரிவுரையாளர் **முனைவர் கி.ஜெயக்குமார்** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தாள்சுவடியைப் படியெடுக்க அனுமதியளித்த அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக காப்பாட்சியர் முனைவர் **சு.சௌந்திரபாண்டியன்** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது கல்விப் பயணம் தொட காரணமாக இருந்த எனது **பெற்றோர் மு.இராமகிருஷ்ணன் இரா.தனலட்சுமி** அவர்களுக்கும், எனது அண்ணன் **சந்திரசேகரன் மற்றும் எனது நண்பர்கள் பாலசுப்பிரமணிய ராஜா,மோகன்குமார், மாரியப்பன், சிதம்பரம், மாதன்** ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# குமரதேவர் நெஞ்சுவிடு தூது ஓர் ஆய்வு

## பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2. | நூல் அறிமுகம் | 3 |
| 3. | பதிப்புரை | 5 |
| 4 | குமார தேவர் நெஞ்சுவிடு தூது | 7 |
| 5. | பாடல் முதற்குறிப்பு அகர வரிசை | 74 |

# 1
# முன்னுரை

## ஆய்வுப் பொருள்

சுவடிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப் பெற்றவை. அவ்வெழுத்துக்களை படிப்பது என்பது அனைவராலும் இயலாது எனவே அதனை அறிந்தவர்கள், அதில் ஈடுபாடுடையவர்கள் அவற்றை அச்சிட்டனர். ஓலைச் சுவடிகளில் உள்ள இலக்கியங்களை பதிப்பிக்கும் பணி சி.வை.தா, உ.வே.சா தொடங்கி பலராலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுவடியியல் பட்டய வகுப்பின் செயல் திட்டத்திற்காக குமார தேவர் நெஞ்சுவிடு தூது என்னும் தாள்சுவடி நூலின் முதற்பதிப்பாகச் சென்னைப் பல்கலைக்கழகம் சுவடியில் பட்டயப் பேற்றிற்காகப் (2003–2004) பதிப்பிக்கப்படுகிறது.

## ஆய்வின் நோக்கம்

சுவடியிலுள்ளவற்றைத் தவறின்றிப் பதிப்பிப்பதும் இவ்விலக்கியத்தில் இடம் பெற்றுள்ள மொழி நடை சொல்லாட்சி முதலியவற்றினை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கம்.

## ஆய்வின் மூலம்

சென்னை அரசினர் கீழ்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள தாள் சுவடிகளுள் ஒன்றான குமார தேவர் நெஞ்சுவிடு

தூது என்னும் நூல் (சுவடி எண் ஆர் 4610) என்னும் சுவடியே இவ்வாய்வின் மூலம்

**ஆய்வுத் திட்டம்**

இந்நூல் முன்னுரை, நூல் அறிமுகம், பதிப்புரை நூல், சொற்பொருள் அகராதி என்னும் இயல்களை கொண்டுள்ளது.

முன்னுரை, நூல் அறிமுகம் என்ற இரு பகுதிகளில் நூலை பற்றிய முழுமையான வரலாறு இடம் பெற்றுள்ளது. நூல் அறிமுகப் பகுதியில் நூலின் கருத்து, நடை ஆகியன இடம் பெற்றுள்ளன.

# 3
# நூல் அறிமுகம்

நூலின் கருத்து தூதுப்பற்றி விளக்குவதும் பஞ்ச மலங்களை வேறோடு களைய என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் மற்றும் பக்தி பரவசத்தை இந்நூல் எடுத்து கூறுகின்றது. இதில் சிவன், பிரம்மன், திருமால் உமையாள், விநாயகர் போன்றோர் துதிக்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் கூறுகின்றது. நூலின் ஆரம்பத்தில் சிவமயம் திருச்சிற்றம்பலம் என தொடங்குகிறது.

## நூல் தோன்றக் காரணம்

சங்க காலம் முதல் இக்காலம் வரை தூது நடைபெறுகிறது. தன் கருத்தை பிறிதொருவருக்கு தெரிவிக்குமாறு ஒருவரை தன் சார்பாக அனுப்பவதே தூது. மயில் அன்னம், கிளி, மேகம் பூவை, தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு, தமிழ், புகையிலை, காக்கை போன்றவற்றை முற்காலத்தில் தூது அனுப்பியுள்ளார்கள். இந்நூல் நெஞ்சை தூது விடுவதாக அமைந்துள்ளது அதை குறிக்கும் வகையில் தூது நூலாக குமார தேவர் நெஞ்சு விடுதூது இயற்றப்பட்டுள்ளது .

## ஆசிரியர் வரலாறு

இந்நூலை இயற்றிய ஆசிரியர் வரலாறு ஒன்றும் கிடைக்கவில்லை. உரைமட்டும் ஒன்று கிடைத்துள்ளது. அதை உரை செய்தவர் ஞானியாராக இருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. இது ஓலைச் சுவடியாக இருந்ததை தாள் சுவடியாக 1953–ல் விஸ்வாத சாஸ்திரி அவர்களால் எழுதப்பட்டுள்ளது – தாள் எண் (ஆர்.4610)

5

# பதிப்புரை

நமது முன்னோர்கள் தங்கள் படைப்புகளைச் சுவடிகளில் பதிவு செய்தார்கள். அப்படைப்புகள் இயற்கைச்சூழல், பாதுகாப்போரின்மை முதலான காரணங்களால் அழிந்துவிட்டன. எனினும் எஞ்சியவை தாள்களில் பிரதியெடுத்தல், அச்சிடல், மூலம் காக்கப்பெற்று வருகின்றன. இவ்வகையில் இந்நூல் சென்னைப் பல்கலைக்கழக சுவடியில் பட்டயப் பேற்றிற்காகப் பதிப்பிக்கப் பெறுகிறது.

## பதிப்பு நூல்

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பலவகையான தமிழ்ச் சுவடிகள் காணப்படுகின்றன. அவற்றுள் எண் ஆர்4610 எண்ணுடைய குமார தேவர் நெஞ்சுவிடு தூது என்னும் நூலே தேர்வு செய்யப்பட்டேன்.

## அமைப்பு

குமார தேவர் நெஞ்சுவிடு தூது என்னும் இத்தாள் சுவடி 76 பக்கங்களைக் கொண்டது சிவமயம் – திருச்சிற்றம்பலம் என்று நூல் தொடங்குகிறது. நூல் இலக்கண நடையில் வடிவம் கொண்டது இவர் அடிக்கடி ஈசுவரன், பிரம்மன், விநாயகர் போன்ற கடவுள்களை பயன்படுத்தியுள்ளார்.

**பதிப்பில் மேற்கொண்டவை**

சுவடியின் கண் காணப்படும் எழுத்து மாற்றங்கள் சரியான முறையில் திருத்தி பதிப்பிக்கப்பட்டுள்ளன. பொருளுக்கு ஏற்ப புள்ளியிட்டும் புள்ளி நீக்கியும் குறில் நெடிலுக்கு ஏற்ற கொம்பு மற்றும் துணைக்கால் தகுந்தவாறு மாற்றி திருத்தப்பட்டுள்ளது. பாடல்களில் பிழைகள் மிகுந்துள்ளதால் அவையும் திருத்தப்பட்டுள்ளன.

**நடை**

எதுகை மோனையோடு கூடிய ஆசிரிய விருத்தத்தால் ஆனது. அனைத்து பாடல்களும் இலக்கண நடையில் அமைந்துள்ளது.

இவை போல் பல எழுத்துச் சீர்திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. மேலும், தேவையான இடங்களில் ஒற்றெழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

# குமார தேவர் நெஞ்சுவிடு தூது

## காப்பு

பொங்கர வதுமிந் தும்புரி
சடைய தனிற் சேர்த்து
அங்காந் தனிலிடத் திலழகியே
மானை யேந்தும்
சங்கான் சேயெம பாசந்தகர்த்
தைந்து மொருங்க னுக்க
ஐங்கரங் கொண்ட வாழ்த்தை
யனைவ ணக்கஞ் செய்வாம்.

சீறுகின்ற சர்பத்தையும் இளம் பிறையையும் கட்டப்பட்ட சடையினிடத்தில் வைத்து அழகிய கையில் மனையும் இடப்பக்கத்தில் அழகு பொருந்திய உமையவளையும் தாங்குகின்ற பரமசிவனது திருக்குமாரகினம் உடைய பந்த பாசங்களைக் கெடுத்துப் பஞ்சமலங்களையும் வேரோடு களைய ஐந்து கரத்தோடு எழுந்தருளியிருக்கின்ற பாதாள விநாயகரை வணங்கு வாமென்றவாறு.

பஞ்சமலங்களாவன – ஆணவம், மாயை, கன்மம், திரோதை, மாமாயை, என்பன.

ஆண்ட குருவே கண்மணியே
யருளே நீநா னென்றாகப்
பூண்ட வடிவே யென்னுடைய
புந்திய தனுனின் றுணர்த்தி
ஈண்டப் படியே யென்னாவி
லிருந்து முரைக்க வேண்டுநீ

நீண்ட மாலும யன்போற்று
நிமல விருத்த நாயகியே.

நெடுமாலும் பிரம்மாவும் துதிக்கின்ற களங்காகிதமாகிய விருத்தாம்பிகையை என்னை ஆட்கொண்ட குருமூர்த்தமே விழிமணியே திருவருட்சக்தியே லோகமாதாவாகிய தேவரீர் நீயென்னும் பிரம்மமும் நானென்றுங் கூடஸ்தனும் அத்துவிதமாக அனுபவித்த அயிக்கியானுஸ்ந்தானத்தை அடியேனது அறிவினுள் இருந்து அறிவித்தருளிப் புறத்திலு மதுபோலவே என் வாக்கில் நின்றும் இன்னுல் கூறிய அருள வேண்டும்.

மேலாஞ் சதுட்ட(ய) சா தனங்கண்மேவி
நின்றந் தபேர்கு ரைக்கின்
மேலா மதுநா மெனத்திட மாய்விளங்
குமவை யில்லா தவர்க்கு
மேலாம் பரமன் மான்மழுவாய்
விளங்கி யுரைத்தும் விளங்காது
மேலாஞ் சாதனங் கள்வரமே
வேண்டுஞ் சாது சங்கம்.

உயர்வாகிய சாதன சதுஷ்டயம் பொருந்திய பூரணமான பக்குவர்களுக்கு எவைக்கு மேலாகிய பிரம்மமே கூடஸ்தரனென்று உபதேசித்தமாத்திரத்தில் உறுதியாய் பிரகாசிக்கும் அச்சாதனங்களின்றிய அபக்குவர்களுக்குச்

சீரோஷ்டமாகிய சிவன் மான் மழு, முதலியவற்றோடு பிரத்தியட்சமாய் வந்து உபதேசித்த போதிலும் பிரகாசிக்காது. மேன்மையாகிய நான்கு சாதனங்களும் உண்டாகச் சற்சங்கத்தோடு பழக வேண்டும்.

உண்டாய்த் தோன்றி ரமித்திடுதல்
லொருநம் வடிவே யுருநாமம்
கண்டே யிடன்மாத் திரமல்லாற்
கருதிப் பார்க்கின் வேறில்லை
பண்டே முதலித் தகைவாகும்
பலவாய்க் காணன் மைத்திரிவால்
விண்டாற் றிரிவை யேகமாய்
விளங்கு நமது வடிவமே

ஒப்பற்ற நமது சச்சிதானந்த ஸ்ரூபமே இருந்து விளங்கி ஆனந்திருப்பது நாமரூபமோ எனின் தோற்ற மாத்திரமே யல்லாமல் நினைத்து பார்க்குமிடத்தில் வேறேயில்லை அனாதிகாலமே இந்த சுவானு பூதியாகும் (இங்ஙனம் இருக்க) நானாவாகத் தோன்றுவது அஞ்ஞான விபரீத்தரலாம் அவ்விபரீதத்தை விட்டால் நமது சொரூபமே அத்துவிதமாய் பிரகாசிக்கும்.

## 10

எந்தச் சத்தில் சத்தாகும்
இந்த வுலகு சத்தாகும்
எந்தச் சிவத்தில் சித்தாகு
மிந்தவு லகத்தான் விளங்கும்
எந்த வின்பிற் றுண்பாகு
மிந்த வுலக மின்பாகும்
அந்தச் சச்சிதா னந்த
மதுவே நமது வடிவாகும்

இந்தவுலகம் எந்த சத்தினிடத்தில் அனுதர்மாகுமோ அதுவே சற்சொரூபமாம் இவ்வுலகம் எந்த ஆன்ந்தத்தில் துக்கமாகுமோ அதுவே ஆனந்த சொரூபமாம் அங்ஙனமான அஸ்திபாதி பிரியமே நமது சொச்சொரூபமாம்.

எல்லா நாமே யெனைவறிந்தா
லெஃதை நினைவா னினைத்திடுதல்
சொல்லா லெஃதை யுரைத்திடுத
றொழிலா லெஃதைச் செய்திடுதல்
நில்லா வுலகை வேறெனவே
நினைத்த லுரைத்த றொழில்புரிதல்
நல்லா ரனைத்துநா மெனவே
நாடரா வையினொன் றையுமே.

சர்வமும் நாமேயென்று சுவானுபவமாகத் தெரிந்தால் எதை நினைவினால் நினைப்பது வார்த்தையால் எதை வசனிப்பது கிரியையால் எதை செய்வது அசாத்தாகிய

பிரபஞ்சத்தை அன்னியமென்று நினைவதும் வசனிப்பது தொழில் செய்வதுமாகிய அக்கிரியைகளில் ஒன்றையாவது சத்துக்கள் சர்வமுநாமே என்று துவிதமாகக் குறியார்கள்.

நானா வாகத் தோன்றிய
நாமரூப மிவை யனைத்தும்
நானா வல்லலோடு நாமே
நாடிம கிழுஞ்சித் திரங்கள்
தானாஞ் சித்தாகா சத்திற்
றன்னைத் தானேதான் றானே
தானாங் கருவியி னில்வரைந்து
தானே நோக்கி மகிழ்ந்திடுதல்

பலவாகக் காணப்படுகின்ற நாமரூபங்களாகிய இவையெல்லாம் பலவல்ல ஒப்பற்ற நமது சொரூபமே கண்டுகளிக்கின்ற விசித்திரங்களில் யாதெனின் தற்சொரூமாகிய ஞான காயத்தில் தற்சொரூப விலாசத்தையே தனக்குத் தானே தன்மயமாகிய கல்விப் பொருள் எழுதி தான் தானே பார்த்து ஆனந்தித்தலாம்.

தங்கந் தானே பணியாய்ச்
சாற்றும் விதமாய் விளங்குதலின்
அங்குமு தலாஞ்ச சங்களா
யறிவே விளங்கு மயலில்லை
இங்கங் கென்றே பங்கொன்று
மில்லை யகன்றவ றிவொன்றே

துங்க வறிவு தோன்றளவுந்
தோன்று நானா விதரூபம்

பொன்னொன்றே ஆபரணங்களாகிச் சொல்லுகின்ற பலநாமங்களை உடைத்தாகி பிரகாசிப்பது போல ஆத்ம சொரூபமே சரீர முதலாகிய பிரபஞ்சங்களாய் பிரகாசிக்கும் வேறில்லை. இவ்விடமவ் விடமென்று ஒன்றேயாகும். அப்பரிபூரண ஞானமானது வியாபிக்கும் மட்டும் பலவகைப் பட்ட திரிசியங்கள் பிரகாசிக்கும்.

இன்னா னன்னு னிதுவதுவென்
றியம்பு முகம்வே றன்று
தன்னா னந்தலீ லையினாற்
றன்னைத் தானே தன்னிடத்தில்
அன்னா னின்னா னதுவிதுவென்
றனந்தவி தமாய்த்தான் பகுந்தே
உன்னா நின்று தானடிக்கு
மொருகூற் றெனவே யியம்புவரால்

இவ்விதப்பட்டவன் அவ்விதப்பட்டவன் இந்தவஸ்து அந்தஸ்து என்று சொல்லுகின்ற பிரபஞ்சமானது அன்னியமல்ல. தனது சுகானந்த லீலா விபூதியினால் தனது சொற்சொரூபத்தைத் தானே தனது சன்னிதானத்தில், அவ்விதப்பட்டவன் – இவ்விதப்பட்டவன் அந்த பொருளிந்த

பொருள் என்று நானா வகையாய்த் தானே பிரித்துச் சங்கற்பித்து நின்றுதான் செய்கின்ற ஓர் நடிப்பென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

தானுண் டாகிலு லகுன்டாங்
 தானுண் டாகிலு யிருண்டாம்
தானுண் டாகிற் பாமுண்டாந்
 தானுண் டாகில் வீடுண்டாம்
தானுண் டாகிற் பஞ்சதொழிற்
 றானுண் டாருந் தானையன்றித்
தானுண் டோமற்ற வையதனாற்
 றானே யனைத்தும் வேறில்லை.

தானுண்டானால் உலக முண்டாகும். தானுண்டானால் சீவனுண்டாகும். தானுண்டானால் சுவரணுண்டாகும். தானுண்மானால் மோட்சமுண்டாகும்.

தானுண்டானால் பஞ்சகிருத்தியங்கள் தானே உண்டாகும். தன்னை அல்லாமல் வேறு பொருள்கள் தானே உள்ளதோ, அவ்வனுபவத்தினால் சர்வமும் தனது சொரூபமே வேறில்லை.

(எ–டு) பஞ்ச கிருத்தியங்களாவன – சிருஷ்ட்டிஸ் திதிசுங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்பனவாம்.

மந்தவி ருளிற்கய றாவின்
மாறுபாடாய் தோன்றுதல் போல
இந்தவு லகுமுயிர் களுமவ்
வீசன் றானுமுயி ரடையும்
பந்தம் வீடு மீசன்செய்
பஞ்ச கிருத்தியங் களுமே
அந்தந மதுசொரூப பத்தி
லாரோ பிதமாய் நின்றிலகும்.

மக்கினமான அந்த காரத்தில் கயிறானது சர்ப்பத்தைப் போல வேறுபாடாகித் தோன்றுந்தன்மைபோல் இந்த சகத்தும் சீவர்களும் அந்த ஈஸ்வரனும் சீவர்களை அடைக்கின்ற பந்தமும் முத்தியும் ஈசுவரனாற் செய்யப்பட்ட ஐந்தொழில்களும் அழகிய நமதாத்ம சொரூபத்தில் அத்தியாசமாய்ப் பிரகாசிக்கும்.

அனந்தவி தமாய்க் கீற்றையுடைத்தாகுஞ்
சிலையொன் றதைப் பார்க்கில்
அனந்தவி தமாய்த் தோன்றியிடு
மந்தக் கீற்றுஞ் சிலையொன்றை
அனந்தமு டையநம் மிடத்தில்
அகில மந்தத்தகை மைபோல
அனந்தவி தமாய்தோன் றியிடு
மறிவே யன்றிவே றில்லை.

அளவில்லாத வகையாய் இரேகையை உடையதாகிய ஒரு சிலையுண்டு. அதைப் பார்க்குமிடத்தில் அளவில்லாத

வகையாய்க் காணப்படும் அவ்விரேகையுஞ் சிலையும் ஒன்றேயாம். அழிவின்மையை உடைய நமது சொரூபத்தில் பிரபஞ்சமானது அத்தன்மை போல அளவில்லா வகையாய்க் காணப்படும். அறிவு சொரூபமே அன்றி வேறில்லை.

மையே மிகுத்தினா மோக
மயக்கிற் கனவைக் கனவதனில்
பொய்யே யெனத்தோன் றாதவர்கே
புகல வேண்டுந னவுர்ந்தோர்
மெய்யே போல தோன்றநனி
விளங்குஞ் சகஞ்சற் குருவன்றிப்
பொய்யே யெனத்திட் டமதாகப்
பொருந்தத் தோன்றா தொருக்காலும்

இருள் நிறைந்த நித்திராமோக மயக்கத்தினால் வருகின்ற சொப்பனத்தை அச்சொரூப்பனா – வஸ்தையில் மித்தையேயென்று கண்டறியாதவர்க்குச் சாக்கிரத்தை அறியாதவர்கள் சொல்ல வேண்டும். அதுபோல சத்தியமாகத் தோன்றி நன்றாகப் பிரகாசிக்கின்ற உலகமானது, சற்குருவினால்லாமல் மித்தையே என்று உறுதியாகப் பொருந்தும்படி ஒரு காலமும் தோற்ற மாட்டாது.

கனவி நனவே யுணர்ந்துயர்ந்தோர்
கனவென் றொருவர்க் குரைத்திடினும்
கனவி தெனவே காணாது காணுந்
தனக்கென் றறிவு திக்கின்
வினவி லதுபோ னைவையுந்தம்
விகற்ப மெனவே யுரைத்திடுனு
நினைவி சமாய்க் கொள்ளாது
நிசமாந் தனக்கென் றறிவுதிக்கில்

சொப்பனத்தில் சாக்கிறத்தை அறிந்து மேலானவர்கள் சொப்பனமென்று ஒருவனுக்குச் சொன்னபோதிலும் இது சொப்பனம் என்றுக் காண மாட்டான். அவனுக்கே அழிவு உதையமானால் காண்பான். கேட்கும் இடத்தில் அத்திருஷ்டாந்தம் போல சாக்கிரத்தையும் தனது மனோவிகற்பமென்று சொன்னபோதிலும் புத்தியில் உண்மையாய் பிரகாசிக்கின்ற தனக்கே ஞானானுபவமும் உதயமானால் உண்மையாய் பிரகாசிக்கும்.

கனவைக் கனவென் றுணர்ந்தனைக்
கனவினீ யாரென வினவிலவனு
நனவைத் தனில்விளங் குந்தனையே
யுரைப்ப னதின்
நனவை நினைவென் றுணர்ந்தவனை
நனவினி யாரென யொருவன்
வினவில் வனுமகண் டமாய்
விளங்கும் பிரம்மமே யென்பின்.

சொப்பனத்தை சொப்பனமென்று அறிந்த ஒருவனைச் சொப்பனத்தில் நீயாவனென்று ஒரு புருட கேட்குமிடத்தில் அப்புருடனும் சாக்கிரவஸ் தையில்ப் பிரகாசிக்கின்ற தன்னையே சொல்லுவான்.

அத்திருஷ்டாந்தம் போல சாக்கிரத்தை மனோசங்கற்பமென்று அறிந்த ஞானியைச் சாக்கிரத்தில் நீ யாவனென்று ஒரு புமான் கேட்குமிடத்தில் அந்த ஞானியும் பரிபூரணமாய்ச் சதோதயமாய்ப் பிரகாசிக்கின்ற ஆத்மாவே என்று சொல்லுவான்.

நனவிற் றுனோரிடத் திருக்க
நவிகித் தினாயின் மோகத்தால்
கனவிற் றேசாந் திரமுதலாய்க்
காணும னேகவி தமஃதின்
வினவினா மும்ககண் டமாய்
விளங்கிய சையா திருந்திடவே
கனவிம் மாயைத் தனில்விதமாய்க்
காணுந் தேசாந் திரமுதலாய்

சாக்கிரத்தில் ஒருவன் ஒரு ஸ்தானத்தில் இருக்கச் சொல்லுகின்ற நித்திராமயத்தினால் சொப்பனத்தில் தேசமாதியாக நானாவகையுந் தோன்றும் அத்திருஷ்டாந்தம் போல கேட்குமிடத்தில் யாமும் பரிபூரணமாய் பிரகாசித்துச்

சலனமின்றி இருக்க மகத்தாகிய இந்த மாயா மோகத்தினால் தேச நாடுகளாகிய நானாவிதமாய் ஆரோபிக்கும்.

கனவிற் றோன்றும் பொருளெல்லாம்
கனவிற் கனவென் றுணர்ந்தக்கால்
நனவின் விவகாரந் தோன்று
நவிற்று மிந்தத் தகைமை போல
நனவிற் றோன்றுஞ் சகமனைத்து
நமது சங்கற் பமதெனவே
நனவிற் றோன்றி யிடுஞ்காலை
நமது சொரூபந் தோன்றியிடும்.

சொப்பனத்தில் திரிசியமாகின்ற சகல வஸ்த்துக்களும் சொப்பனத்திலேயே சொப்பனமென்று அறிந்தவிடத்தில் சாக்கிரத்தின் விவகாரமானது காணப்படும். சொல்லுகின்ற இத்திருஷ்டாந்தம் போல சாக்கிரத்தில் காணப்படுகின்ற சகலப் பிரபஞ்சங்களும் நம்முடைய சங்கற்பமென்று அச்சாக்கிரத்தில் தானே காணுமிடத்தில் நமதறிவு சொருங் காணப்படும்.

மனத்திற் கனவிற் கனவெனவே
மதிக்கினநந் தவிவகாரந்
தனத்த முறினுங் கலக்கமுரு
னதைகமு றினுமகிழ்ச் சியுறான்
மனத்தின் விலவிவ கார
மயங்கி நீங்கா திருப்பனதின்
கனத்த சகஞ்சங் கற்பமெனக்

சொப்பனத்தில் சொப்பனமே என்று மனதில் அறிந்தால் அவ்விவகாரத்தில் அழிவு வந்தாலும் துன்பப்படான் விருத்தியானாலும் சந்தோஷப்படான். மனத்தில் சாக்கிர வியவஹாரத்தினால் சொப்பன விவஹரத்தில் மயங்கி போகாமல் சுகமாய் இருப்பான். அத்திருஷ்டாந்தம் போல பெரிதான உலகம் சங்கற்ப மாத்திரமே என்று பார்த்தால் தற்சொரூபத்தை விடாமல் சத்தா சாமான்ய மாத்திரமாய் பிரகாசிப்பார்கள்.

சிங்கா தனத்தில் வீற்றிருக்குந்
சிறப்பா ராசுங் கனவிடைந்து
மங்காப் புல்லத் தன்மையை மேவி
வருந்து வோன்றன் னைவுணரின்
அங்காஞ் சோக மோகமெலா
மந்தக் கண மேநீங்கு மதின்
இங்காஞ் சீவத்துவ மோக
மரியுந் தனைத் தேர்ந்தக்கணமே.

சிங்காதனத்தில் எழுந்த அருளியிருக்குஞ் சிறப்பு பொருந்திய அரசனும் சொப்பனமடைந்து குறைந்த நீசத் தன்மையைப் பொருந்தி வருந்துமவ்மரசன் தனது சாக்கிரத்தை அறிந்தால் அச்சொப்பணத்தில் உண்டாகிய சோக மோகங்ளெல்லாம் அப்பொழுதே போகும். அதிதிருஷடாந்தம் போல இத்தேகாதி பிரபஞ்சத்தில் உண்டாகிய சிதாபாச

தவமோகமானது தனது நிஜ சொரூபத்தை அறிந்த மாத்திரத்தில் நாசமாம்.

கனவைக் கனவென்று ணர்தந்தக்
கனவின னவைநோக் கிடினக்
கனவை யொழிந்தவக் கணமே
காணு நனவில் விழிக்குமதின்
நனனைச் சங்கற் பமென்று உணர்ந்து
நனவிற் றனையே நோக்கியிடின்
நனவை யொழிந்திட் டக்கணமே
நமது சொரூபத்தை விழிக்கும்

சொப்பனத்தைச் சொப்பனமென்று அறிந்து அச்சொப்பனா வஸ்தையில் சாக்கிரத்தைப் பார்த்தால் அச்சொப்பனத்தை நீங்கிய அந்த கணமே காணப்படுகின்ற சாக்கிரத்தை மனநின்வென்று அறிந்து சாக்கிரத்தில் தனதாத்ம சொரூபத்தையே பார்த்தால் தேகாதி பிரபஞ்சவாசனா மயமாகிய சாக்கிர வஸ்தை நீங்கி நமது அறிவானந்த சொரூபத்தில் அப்பொழுதே விழிப்பான்.

கனவை யொழிந்து நனவதனைக்
கண்டார் நனவினின் றுபினக்
கனவை நோக்கியி டின்முன்னங்
கண்டப டியேதோன் றுமதின்
நனவை யொழிந்து தன்சொரூப
நன்றா யுணர்ந்தோ ரதினன்று

நனவை நோக்கி நினவுகொடு
நாடின முனம்போற் தோன்றியிடும்.

சொப்பனத்தில் நீங்குச் சாக்கிரத்தைக் கண்டவர்கள் சாக்கிரத்திருந்து பின்பு அச்சொப்பனத்தைப் பார்க்குமிடத்து முன் பார்த்தது போலவே காணும் அத்திருஷ்டாந்தம் போல – சாக்கிர நீங்கித் தனதாத்ம சொரூபத்தை ஐயந்திரிபின்றி அறிந்தவர்கள் அவ்வறிவானந்த சொரூபனத்தினின்று சாக்கிரத்தைக் கண்டு மனோ வாசனையைக் கொண்டு பார்க்குமிடத்து முன் போலவேக் காணப்படும்.

உறக்கமோ மதிற்கன விலுலக
முயிர்கள் விவகாரம்
சிறக்குமெய் போற்றோன் றியதைத்
தேரிற்பொய் யாய்விடு மஃதின்
மறக்குமாய் மோக மதின்மா
சார்பந்தம் விட தெனப்
பிறக்கு மவைகட மைத்தேரிற்
பேசும் பொய்யாய்ப் போய்விடும்

நித்திரா மோகத்திலுண்டாகியற் சொப்பனத்தில் உலகமும் சீவ. விவகாரங்களும் மேலாகிய யதார்த்தம் போலக் காணப்பட்டு அதன் நிஜ சொரூபத்தை விசாரிக்குமிடத்து மித்தையாகிப்போம். அதிருஷ்டாந்தம்போல – மறைப்பையுடைய மாயா மோக விலாசத்தினால் குற்றம் பொருந்திய பெத்த

முத்தியென்று உண்டாகும். அப்பெத்த முத்தியகளை விசாரிக்குமிடத்தில் சொல்லுகின்ற மித்தையாய்ப் போகும்.

ஒருவனு ளதாகையிற் கனவுமண்டோ
முறக்க மோகமதின்
ஒருவனி லதாகையிற் கனவு
மொருகா லையினு மிலதாகும்
சொரூபந மதுண்டா கையினாற்
றோன்று நானாவித சகநம்
சொரூப மிலதே லிலையதனாற்
றோன்று மனைத்துஞ் சொரூபமே.

ஒரு புருடன் உண்டாகியிருக்கில் நித்திரா மோகத்தில் சொப்பனமும் உளதாம். ஒரு புருடன் இன்றாயிருக்கில் சொப்பனமும் ஒரு காலத்தில் இல்லாததாம் நமது சொரூபம் உண்டாயிருக்கையினால் பலவித சகங்கள் உண்டாகும். நமது அறிவானந்த சுவரூப இல்லாவிட்டால் இல்லையாகும். அவ்வனுபவத்தினால் காணப்படுகின்ற சகலமும் நமது சொரூபமேயாகும்.

படிகந் தடுத்தநி றங்களதிற்
பத்திபா யுமந்நிறமாய்
படிகமா கிநீங்கியி டும்பகரு
மிந்தத் தகைமை போல

சொப்பனத்தில் சொப்பனமே என்று மனதில் அறிந்தால் அவ்விவகாரத்தில் அழிவு வந்தாலும் துன்பப்படான் விருத்தியானாலும் சந்தோஷப்படான். மனத்தில் சாக்கிர வியவஹாரத்தினால் சொப்பன விவஹாரத்தில் மயங்கி போகாமல் சுகமாய் இருப்பான். அத்திருஷ்டாந்தம் போல பெரிதான உலகம் சங்கற்ப மாத்திரமே என்று பார்த்தால் தற்சொரூபத்தை விடாமல் சத்தா சாமான்ய மாத்திரமாய் பிரகாசிப்பார்கள்.

சிங்கா தனத்தில் வீற்றிருக்குந்
சிறப்பா ராசுங் கனவிடைந்து
மங்காப் புல்லத் தன்மையை மேவி
வருந்து வோன்றன் னைவுணரின்
அங்காஞ் சோக மோகமெலா
மந்தக் கண மேநீங்கு மதின்
இங்காஞ் சீவத்துவ மோக
மரியுந் தனைத் தேர்ந்தக்கணமே.

சிங்காதனத்தில் எழுந்த அருளியிருக்குஞ் சிறப்பு பொருந்திய அரசனும் சொப்பனமடைந்து குறைந்த நீசத் தன்மையைப் பொருந்தி வருந்துமவ்மரசன் தனது சாக்கிரத்தை அறிந்தால் அச்சொப்பணத்தில் உண்டாகிய சோக மோகங்ளெல்லாம் அப்பொழுதே போகும். அதிதிருஷடாந்தம் போல இத்தேகாதி பிரபஞ்சத்தில் உண்டாகிய சிதாபாச

சாபமும் அப்பமுதையாகிப்போம். அத்திருஷ்டாந்தம் போல் களங்கமற்ற பிரமத்தில் அத்தியாசமாய் காணப்பட்ட பல உலகங்களை யதார்த்த திருஷ்டியாய்ப் பார்க்குமிடத்தில் குற்றமின்றிப் பிரம்மஸ்வரூபமே ஆகிப் பிரகாசிக்கும் பல வுலகங்களும் அப்பிரம்ம சொரூபமே ஆகும்.

தோன்றி விளங்கும் பொருளெல்லாந்
தொல்வே தாந்தவி சாரணையின்
ஊன்றி நோக்கி யனுதினமு
மூகம தினிற்பரி சயித்தால்
தோன்றி விளங்கு மறிவொன்றே
சொன்மாத் திரமாய் விடுமுலகம்
ஊன்ற நோக்காத வர்கட்கே
யுளதுபோ லத்தோன்றி றியிடும்

உண்டாகிப் பிரகாசிக்கின்ற சகல விஸ்துக்களும் பழமையாகிய வேதாந்த விசாரத்தில் நினைத்துப் பார்த்துச் சதாகாலமும் யுத்தியினால் ஆராய்ந்தறிந்தால் உண்டாகிப் பிரகாசிக்கின்ற பிரம்மாத்திரமேயாம் பிரபஞ்சமானது வசனமாத்திரமாய்ப்போம் நிலைத்துப் பாராவஞ்ஞானிகளுக்கே யதார்த்தம் போல விளங்கும்.

ஏகமா கிநின்றமல மாயிருக்
குநமக் கிப்பந் தமெனும்
மோகம் வந்ததே தென்று
முன்பின் பாரா திப்பந்தம்
போகவழி யேதென நாடிப்
பொருந்தும் வேதவி சாரணையால்
யூகமத னிற்சிதைக் கினதி
னுள்ளவி யல்பு பின்தோன்றும்

அத்வைதமாகி மலரகிதமாய் இருக்கின்ற எமக்கு இந்தப்பந்தம் என்கிற மயக்கம் உண்டானது. எதனால் என்று முதலும் முடிவும் விசாரியாமல் இந்த பந்தம் நீங்கும் மார்க்கமே என்று விசாரித்து பொருந்துகின்ற உபனிஷ விசாரத்தினாலும் நுண்ணறிவு ஆனாலும் அழித்தால் பந்தத்திலுண்டான சுபாவம் பிறபாடு தோன்றும்.

பரவை தானே யோரலையிற்
பலவாய் விளங்கு மோரலையில்
பரவை நீங்கி யொன்றாகிப்
பழயப டியேவிளங் குமதின்
பரவுஞ் சொரூபஞ் சங்கற்பப்
பகுதிய தினிற்ப லவாகிப்
பரவும் சங்கற்பத் தொன்றாய்ப்
பழயபடியே விளங்கியிடும்.

கடலொன்றே ஓரலையினால் நுரைதிவலை குமிழாயாகிய நானாவாகத் தோற்றும் ஓரலையினால் அங்ஙனம் பரவு தலின்றிக் கடலொன்றேயாகி முன் போலவே தோற்றும் அத்திருஷ்டாந்தம் போல யாவரும் துதிகின்ற பிரம்ம சொரூபமானது சங்கற்ப் பகுப்பினால் நானாவடிவங்களாகிச் சொல்லுகின்ற சங்கற்ப நாசத்தினால் அத்வைதமாய் முன்போலவே பிரகாசிக்கும்.

கடங்கட மதுகா ரணத்தைக்
காட்டி டாதுமுன் விளங்கும்
படங்கடா மும்படியே
பகர்கா ரணமு நீங்காது
கடங்களா குமிச்சக முந்தான்
முன்விளங் குங்கா ரணமாம்
இடங்கொள் சொரூபத் தையுங்
காட்டா திருக்கு மதைவிட்ட கலாதே

கடகலசங்கள் அவற்றின் காரணமாகிய மண்ணைக் காட்டாமல் முன்னாகத் தோற்றும். வஸ்திரங்களும் அதுபோலவே சொல்லுகின்ற காரணமாகிய நூலையும் விட்டொழியாது மித்தையாகின்ற இப்பிரபஞ்சமும் காரணமாகிய பரிபூரணமான பிரம சொரூபத்தைக் காண்பியாமலும் அப்பிரம்ம சொரூபத்தை விட்டொழியாமலும் தானே முன்னதாகப் பிரகாசிக்கும்.

மரத்தை நோக்கின் மதகரியும்
மறைந்து விளங்கு மதைநோக்கின்
மரத்தை மறைத்துத் தான்விளங்கும்
வாறுபோ லச்சக முழுவதும்
பரத்தை நோக்கின் தின்மறைந்து
பாமாய் விளங்குஞ் சகநோக்கில்
பரத்தை மறைத்துத் தான்விளங்கும்
பரமே யணைத்து மாதலினால்

மரவடிவத்தைப் பார்க்குமிடத்து மதயானையும் மறைந்து நிற்கும் அவ்யானையை பார்க்குமிடத்து மரத்தை மூடி யானையே தோற்றும். அத்திருஷ்டாந்தம் போல சகல காரசரப் பிரபஞ்சங்களும் பிரம்மமாகப் பார்க்குமிடத்து அப்பிரமத்திற்கரைந்து பிரம்மம்மாக பிரகாசிக்கும் உலகமாகப் பார்க்குமிடத்து பிரம்ம சொரூபத்தை மறைத்து அப்பிரபஞ்சமே தோற்றும் ஆகையால் சர்வமும் பிரம்மமயமாம்.

நாகத் துதிக்கை தனைநோக்கி
னாசிக் கரமுந் தோன்றியிடும்
நாகன யனந்தனை நோக்கி
னயனஞ் செவியுந் தோன்றியிடும்
ஏகக ருவிபார்த் தபடியிரண்டு
விதமும் விளங்குமதின்
ஏக பிரமும்ப் பார்த்தபடி
யில்கு முலகஞ் சித்ததுமாய்

யானையின் தும்பிக்கையைப் பார்க்குமிடத்து கிராணேந்திர விடயமும் பாணீந்திரிய விடயமும் தோற்றப்படும். பாம்பின் கண்ணை பார்க்குமிடத்து சஷிரிந்திரிய விடயமும் சுரோத்திரேந்திய விடயமும் தோற்றப்படும். ஓரிந்திரியக் கருவியில் பார்த்த பிரகாரமே இருவகை விஷயங்களும் பிரகாசிக்கும் அத்திருஷ்டாந்தம் போல அத்துவைத பிரமம்மும் இருந்த படியே சடசித்துக்களாய் பிரகாசிக்கும்.

ஊனா மபோக மெமதென்றே
யுன்னல் விசார மிலாமையினால்
நீநா னவைகளி வைகளென
நிலைபோல் விளங்கி யிடுந்த
நானா விதமாஞ் சகமுழுது
நாமேயன்றி வேறில்லை
தானாய் நோக்கிற் றானாகுஞ்
சகமாய் நோக்கிற சகமாகும்

ஆத்ம விசாரமின்மையால் எம்முடைய தென்று சிந்திப்பது நீ—நான் அதுகளில் என்று ஸ்திரம் போலத் தோற்றும் அங்ஙனம் தோற்றுகின்ற இப்பலவகையாகிய பிரபஞ்சம் முழுவதும் நமது சொரூபமேயன்றி அன்னியமில்லை. ஆத்மாவாய் பார்க்கில் ஆத்மாவாகும் பிரபஞ்சமாய்ப் பார்க்கில் பிரபஞ்சமாகும்.

மாயை யெனுமிங் வுரைக்கருத்த
மதிக்கின் யாதொன் றில்லாததுவே
மாயை யெனலிப் படியிருக்க
மதிப்பர தனை யிருவகையாய்
மாயை மெய்யென் றுரைத்திடுவிர்
மயக்கப் பட்டுத் தனைமறந்தோர்
மாயை பொய்யென் றுரைத்திடுவர்
மயக்க நீங்கித் தனையறிந்தோர்

மாயை என்கிற இவ்வசனத்திற்குப் பயன ஆராய்மிடத்து ஒன்று மில்லாததே மாயையென்பது இங்ஙனமிருக்க அதையிரண்டுவிதமாய்ச் சொல்வார்கள். எங்ஙனமெனின் மயக்கமடைந்து தன்னை மறந்தவர்கள் மாயை உண்மையென்று சொல்லுவார்கள் மோகமில்லாமல் ஆத்மாவை அறிந்த ஞானிகள் மாயைமித்தையென்று சொல்லுவார்கள்.

நாம ரூபந் தனைநோக்கி
நாடன் மனமும் புறமுகமும்
நாம ரூபந் தனைநோக்கி
நாடல றிவுமுண்முகமும்
நாம ரூபத் தெவ்வளவு
நாட்டாஞ் சொரூபந் தோன்றாது
நாம ரூபநாட் டம்விடின்
நமது சொரூபந் தோன்றியிடும்.

நாமரூப விஷயங்களை நோக்கிப் பார்த்து மனமும் பகிர் முகமுமாம் நாமரூப விஷயங்களை விட்டு பார்ப்பது ஞானமும் அந்தர்முமாம் நாம ரூபத்தினால் எவ்வளவு காலந் திருஷ்டியோ, அவ்வளவு காலமும் அறிவு தோன்றாது நாமரூபங்களில் திருஷ்டி நீங்கினால் நமது ஆத்ம சொரூபம் தோற்றிவிளங்கும்

அரையகு மாரன்பு லையருட
        னணுகிம றந்துமொ ருவரால்
அரையகு மாரனெ வறியி
        லஃதெப் போதும றவாதின்
தலையிலா சானெழுந் தருளித்
        தனைப்பார்த் ததுநீ யெனவுரைக்கில்
புரையில துவாரூவத்தை
        பொருந்தும் பொழுது மறவானால்

இராசகுமாரன் நீசர்களோடு சேர்ந்து மறந்திருந்தும் ஒரு புருடனால் ராஜகுமாரனென்று அறிந்தால் அவ்வசனம் எந்த காலமும் மறவாதது ரேபல் பூமியில் ஆசிரியர் எழுந்தருளிந்த ஆத்மாவை நோக்கிப் பிரம்மமே கூடஸ்தனென்று உபதேசிக்குமிடத்து மாசற்ற பிரம்ம சொரூபமாவன் அவஸ்தாத்திரயங்கள் அடையுங் காலத்தினும் மறக்க மாட்டான்.

படியிற் பொருளின் மெய்யொன்று
படிறொன் றிந்தா ருவகையும்
முடிவின் மெய்பொய் யறிந்திடலா
மொழியு மிந்தத்த கைமைபோல
கொடியவ லகேமெய் யெனவே
கூறுமதை யுமறிந் திடலாம்
முடிவில் சகம்பொய் யேயாகு
முத்தி யொன்றே மெய்யாகும்.

உலகத்திலுள்ள வஸ்துகளில் உண்மையொன்று பொய்யொன்றும் இவ்விரண்டுவிதத்திலும் கடைசியில் மெய்யும் பொய்யும் தெரியலாம். சொல்லுகின்ற இத்திருஷ்பந்தம் போலக் கொடுமையான உலகத்தை சத்தியமென்று சொல்லுகிறதையும் அந்தத்தில் தெரியலாம். ஆகையால் உலகம் வசத்தியமேயாம் ஏகரசமான மோட்சமே சத்தியமாகும்.

அகிலந் தோன்றும் பொழுது மறைந்
ததிட்டான மதாய்வி ளங்கியடும்
அகிலநீங் கிற்றான் விளங்கும்
அந்த சச்சிதா னந்தம்
அகிலம் தோன்றும் பொழுதுமறைந்
ததுதோன் றுதல்போ லதுதோன்றில்
அகிலம் தோன்றா தகனின் மறைந்
ததனா லகிலம கத்தாமே

அவ்வகைப்பட்ட அஸ்தி பாதி பிரிய வஸ்துவானது சகத்தோற்றரவில் சீவதிருஷ்ட்டியில் மறைந்து அதிட்டான மாத்திரமாய் பிரகாசிக்கும். சகத் தோற்றரவு நீங்கினால் அப்பிரம்மமே பிரகாசிக்கும் சகத் தோரரவில் மறைப்பட்டு அவ்வுலகமே தோற்றுவது போல பிரம்மஞ் தோன்றில் அப்பிரமத்தின் மறைந்து சகந் தோன்றாது அவ்வனுபவத்தில் உலகத்தில் அசத்தியமாம்.

முத்தி யாதோ வெனவெண்ணி
முயங்க வேண்டா மிஃதறுதி
முத்தி யுளதேற் பந்தமுண்டாம்
முத்தி யொருகா லுமில்லை
முத்தி தானாந் சகம்வேறில
மோமக திற்காண் பதைப் போக்கில்
முத்தி யாகுமின் னிலையே
முயன்று வருந்தி நிலைகொள்வாய்

மோட்சம் எஃதோவென்று நினைந்து முயற்கிக்க வேண்டாம் இது சத்தியம் மோட்சமுண்டானால் பெற்றமுளதாகும். மோட்சம் ஒரு காலத்திலும் இல்லை. மோட்சம் தானான பிரம்ம ஸ்ரூபமேயாம். உலகம் அன்னியமின்று மோகத்தினால் பார்ப்பதை நசிக்கில் மோட்சமாம் இவ்வனுபவத்தை முயற்சித்துப் பிரயாசைப் பட்டு நிலையடைவாய்.

இல்லா மாயை தங்கணிலை
யாரு நிற்க வம்மம்ம
பொல்லாப் பிறப்பிற் பட்டதுமாயப்
போக்கமி கவுந்தவிர் ததுமாய்
நல்லா ரிணக்கஞ் சேர்ந்ததுமாய்
ஞானவி சாரமு தித்ததுமாய்
எல்லா மாம்வீ டடைந்ததுமா
யார்க்குங் காட்டி மறைந்திடுமே.

அவ்வவர்களாத்ம நிலையிலும் எவர்களுமிருக்க அதிசயம். சடமான மாயையானது பொல்லாத ஜன்மத்தில் அகப்பட்டதாகவும் பொய்மை அதிகமாய் ஒழித்தாகவும் சாதுசங்கத்தைச் சேர்ந்தாகவும் ஆத்மாவிசாரணை உண்டானதாகவும் சர்வமுமாகிய மோட்சத்தை அடைந்ததாகவும் எவர்களுக்கும் காண்பித்து மறையும்.

எல்லா நீங்கிச் சற்குருவை
யெங்குந் தேடி யடைந்தருளி
நல்லா ருணருண ருஞானநூ
னவின்று விசாரஞ் செய்வதுவும்
பொல்லா மனத்தை யொடுக்கிநிட்டை
பொருந்தி நோக்கிலா நோக்கும்
இல்லா மாயை தனைத்துணிவா
யில்லை யெனவே காண்குதற்கே.

சர்வ சங்கபிரித்தியாகஞ் செய்து ஞான சிரியரை எவ்விடத்துத்தேடிச் சரணமடைந்து பெரியோர்கள் அறிகின்ற ஞானசாஸ்திரங்களை படித்து விசாரணை செய்வதும் பொல்லாத மனதை அடக்கி நிஷ்டையடைந்து

பாராமற் பார்ப்பது மித்தையான மாயையைத் தெளிவாய் இல்லைத் யென்றே பார்ப்பதற்காம்.

விளங்குஞ் சகங்கள னைத்திலும்
விளங்கு நாமா திகணீங்கி
விளங்கும தைமாத் திரநோக்கில்
விளங்கும் பிரம்மக் கணமே
விளங்கு நாமரதி களுமதாய்
விளங்கும் வேறாய் விளங்காது
விளங்குமிந் தநிலை யெவர்க்கும்
விளங்கும் விரோத மதாயே

தோற்றுகின்ற நாமரூபங்களைவிட்டுப் பிரகாசிக்கின்ற அறிவை மாத்திரம் பிரம்ம ஸ்வரூபமானது அந்த கணமே பிரகாசிக்கும். தோற்றுகின்ற நாமரூபங்களும் அப்பிரம்மாய்ப் பிரகாசிக்கும். அன்னியமாய்த் தோன்றாது. பிரகாசிக்கின்ற இச்சுகநிலையானது எவர்களுக்கும் விரோதமின்றிப் பிரகாசிக்கும்.

நாமரூ மவிளக் கலபாம்
நாடலு யிராமவை மாயை
நாமரூ பந்தனை நோக்கி
நாடி செய்தவஞ் ஞானம்
நாமரூ பத்திவ் வளவு
நாட்டமெ னவேசெய் தல்வினை
நாமரூ பந்தனை நோக்கி
நாடுமி டத்தில் வைநிகழும்
நாமரூபப் பிரபஞ்சங்களைப் பிரகாசிப்பது,

ஈஸ்வரன் அவற்றினைப் பார்ப்பது சீவனும், அதுகளும் மாயாமலம் நாமரூபப் பிரபஞ்சங்களைக் கூர்ந்து பார்க்கச் செய்தல், ஆவணமலம் நாமரூபப் பிரபஞ்சத்தில் இவ்வளவு காலம் திருஷ்டி என்று செய்வித்தல் கன்மமலம் நாமரூபப் பிரபஞ்சங்களை கூர்ந்து பார்க்குமிடத்தில் இவ்வைந்தும் பிரகாசிக்கும்.

உருவ நாம நோக்கிடத்தி
லுளவா மிந்தவை வகையும்
உருவ நாம நீக்கிடத்தி
லொன்று மிவைக ளிலவாகிச்
சொரூப மொன்றே நிகழ்தலினாற்
சொன்ன விவைகளை வகையும்
சொரூப மன்றி வேறில்லை
தோன்றும் விவகாரத்திசையில்

நாமரூபங்களை பார்க்குமிடத்தில் இவ்வைந்து விதமும் உண்டாயினவாம். நமரூபங்களை நீக்குமிடத்தில் இவைகளையொன்றும் இல்லனவாகிப் பிரம்மம் ஒன்றுமே விளங்குந் தன்மையினால் முன் சொல்லிய இந்த ஐந்து விதமும் பிரம்மன்றி அன்னியமில்லை விவரிக்குமிடத்தில் அவ்வைந்தும் பிரகாசிக்கும்.

விவகா ரத்திற் பகுப்புகளாய்
விரியும் பரமார்த்த மதனில்
சிவகா மதாய்பிவிளங் யிடுஞ்
சிவமே யனைத்து மாதலினால்
பவகா ரியத்தை யுடையோர்க்குப்
பகுப்பே யென்றுந் தோன்றியடும்
பவகாரி யத்தை யொழிந்தோர்க்கு
பகுப்பொன் றின்றிச் சிவந்தோன்றும்

விவகாரத் திசையில் பிரிவுகளாகிப் பரவி நிற்கும் பரமார்த்திக தசையில் பிரம்மாகாரமாய்ப் பிரகாசிக்கும். பிரம்மமும் சகலமும் ஆகையினால் பிறப்பை உடையவர்க்களுக்கு பிரிவுகளே எப்போதும் பிரகாசிக்கும். பிறப்பை நீங்கின மகான்களுக்கு ஒரு பிரிவுமில்லாமல் பிரம்மம் பிரகாசிக்கும்.

பந்தத் திசையிற் பலவென்றும்
    பரமார்த் தத்திலொன் றென்றும்
இந்தச் சடங்கு சொரூபத்தி
    லொன்று மில்லா நோக்கியிடின்
எந்தக் காலுமொ ருபடித்தாய்
    இலக்குஞ் சொரூப மிவைமாயா
தொந்த தந்தனி றறோன்றியிடுவஞ்
    சொரூபத் தாரோ பிதமாகும்.

அஞ்ஞான திசையில் நானாவென்றும் ஞானதிசையில் ஏகமென்றுஞ் சொல்லப்பட்ட இக்கற்பனைகள் பிரம்மத்தில் எப்போதும் இல்லை. பார்க்குமிடத்து எக்காலத்தும் ஒரே பிரகாசமாய் பிரம்மமஸ்வரூபமானது பிரகாசிக்கும். இது கள்மாயையின் தொடர்பினால் பிரகாசிக்கும் பிரம்மத்தில் அத்தியாசமாகும்.

மித்தி யாவதி வேதாந்தி
    விளங்குஞ் சைவ சிந்தாந்தி
சித்தி வாதியி ருவர்களுஞ்
    சாற்றுந் தங்கட் கடுக்காதை
மித்தி யாவதி சகத்தினக்கு
    விளம்புஞ் சிருஷ்ட முடிவின்று
சத்திய வாதிசி வமொழிந்து
    சற்றும் வேறில் லெனவுரைக்கும்

வேதாந்தியானவன் உலகத்தைப் பொய்யாக வாதிப்பவன் பிரகாசிக்கின்ற சைவசிந்தாந்தியோ, என்றால் மெய்யாகப் வாதிப்பவன், இவ்விருதிறவரும் தங்களுக்குத் தகாதவற்றைச் சொல்லுவார்கள். வேதாந்தியே பிரம்மத்தினின்று உலகத்திற்குச் சிருஷ்டியாதிய கற்பனைகளைச் சொல்லுவான். சைவ சிந்தாந்தியோ சிவச் செயலன்றி கிஞ்சித்தும் வேறேயில்லையென்று சொல்லுவான்.

சகம தென்பதி லையெங்கும்
தானே நின்று விளங்கியிடும்
சகம தெனவே தோன்றிடுதல்
தனது சங்கற்ப மதனில்
அகம தனிலே கண்டுணரா
தவையிற் சிக்கிப் பந்தமுறும்
அகம தினிலே கண்டகற் றிலப்போ
பண்டைப் படிநிகழும்

பிரபஞ்சமென்பது இல்லை, எவ்விடத்திலும் பிரம்மமே நின்று பிரகாசிக்கும். பிரபஞ்சமென்று நின்று காணப்படுவது தன்னுடைய சங்கற்ப ஜாலத்தினாலாகும். சீவனானவன் அகத்திற் கண்டறியாமல் அதுகளில் அகப்பட்டு பந்தபடுவின் அகத்திற் பார்த்து நீக்கினால் அப்போது முன்போலவே பிரகாசிப்பான்.

பந்த மின்றிவீ டின்றிப்ப
ரமேயெங் கும்விளங் கிடவும்
பந்தம் வீடென்று ரைத்திடுதல்
பார்க்கின் மாயா யோகமதில்
சிந்தை விரிவே பந்தம தாஞ்
சிந்தை யொடுக்க மேவீடாம்
இந்த வகையாம் பந்தம்வீ
டியம்பும் பலாத தாகும்.

பெத்தமும் இன்றி முத்தியுமின்றிப் பிரம்மமே எவ்விடத்திலும் பிரகாசிக்கவும் பெத்த முத்தியென்று பேசுவது ஆராந்து பார்க்குமிடத்தில் மாயா மயக்கமாகும். அதுபோல மனவரிவே பெத்தமாம். மனவொடுக்கமே முத்தியாம் பெத்த முத்தியேன்பது இவ்விதமாகும். இங்ஙனம் சொல்லுகின்றதே அபவாதயுத்தியாகும்.

தோன்றி நிகழுல கெல்லாஞ்
சொரூபமே மற்று ரு நாமம்
தோன்றி நிகழ்த்தல் மாயையே
சொரூபம் விடவும் வேறென்று
தோன்றி நிகழும் ருநாமஞ்
சொரூபம் விடவே றெனவுண்ணித்
தோன்றி நிகழ்தல் பந்த மாதஞ்
சொரூப மெனவே யுனல்வீடாம்

உண்டாகி விளங்குகின்ற சகல பிரபஞ்சங்களும் பிரம்மமே நாரூபங்கள் உண்டாகி விளங்குகின்றது. மாயா மோகமே ஆயினும் பிரம்மத்தை யல்லாமலும் அன்னியமல்ல உண்டாகி விளங்குகின்ற நாமரூபங்கள்

பிரம்மத்தை அன்றி அன்னிய மென்று நினைத்து விளங்குவது பெத்தமாகும். பிரமமென்று நினைப்பதே முத்தியாம்.

உருவ நாமம வைக்கிருப்பு
முதிப்பு ருசொரூபத் தினையன்றி
உருவ நாமம வைதனக்கே
பொருகா லையினு மிலதாகும்
உருவ நாமம வைநோக்கி
யொருவிந் மையே நோக்கிடின்
உருவ நாமநி கழந்திடா
தொரு நமவடி வாயேநிகழும்

நாமரூபங்களுக்கு இருப்பும் தோற்றமும் பிரமத்தை அல்லாமல் நாமரூபங்களுக்கு ஒரு காலத்திலும் இல்லை ஆகும். நாமரூபங்களை பார்க்குதல் நீங்கி நமதாத்ம சொரூபத்தையே பார்த்தால் நாமரூபங்கள் விளங்காமல் ஒப்பற்ற நமது சொரூபமாகவே விளங்கும்

பந்த மென்றும வீடென்றும்
        பயலு நினைவே பந்தமாம்
பந்த மெங்காம் வீடெங்காம்
        பரத்தை விடவேறில் லாமையினால்
பந்தஞ் சங்கற் பந்தினிலே
        தாமே மோகித் திடுமுயிர்கள்
பந்தஞ் சங்கற் பந்தனிலே
        தாமே நீங்கியி டுமோகம்.

பெத்த மென்றும் முத்தியென்றும் பழகுகின்ற எண்ணமே பெத்தமாம். பிரமத்தை ஒழிய அன்னியமின்மையால் பெத்தகம் அவ்விடத்தாகும் , தங்கள் தங்களுடைய சடங்கற்பத்தில் சீவர்கள் மயங்குவார்கள். தங்கள் தங்களுடைய நிருவிகற்பத்தில் தமக்கு தாமே அந்தப் பிராந்தியம் ஒழிந்து போவார்கள்.

உருவ நாமந் தனைநோக்கி
        லொருவின் நிலையை நீங்கினதாம்
உருவ நாமந் தனைநீக்கி
        லொருவன் நிலையை நின்றதுவாம்
உருவ நாமம வையிரண்டு
        மொருதன வடிவே யெனக்காணில்
உருவ நாமந் தானேயா
        யொளிரு மதுவே முத்தியுமாம்

நாம ரூபங்களை பார்க்குமிடத்து ஒப்பற்ற தமது சொரூப நிலைமையை விட்டதாகும். நாமரூபங்களை விட்டால் ஒப்பற்ற தனது சொரூப நிலைமையில் இருந்ததாகும். நாமரூபங்களிரண்டும் ஒப்பற்ற தனது சொரூபமே என்று பார்க்கில் நாம ரூபங்கள் தமது சொரூமேயாகி பிரகாசிக்கும் அஃதே மோஷமுமாகும்.

கொள்ளா நெறியே தேதுபந்தங்
　　கூடும் வீடெதென வேண்டாம்
உள்ளாம் புறம்மெ னுமிவையி
　　லுதவுமெஃ தனக்க தினின்
தெள்ளாஞ் சங்கற் பங்களெலா
　　மிரிய நோக்கி நின்றதன்னை
உள்ளாம் புறம்பு மின்றியெங்கு
　　மொழியாயக் காண லாகியிடும்

அடையும் மார்க்கம் யாது பெத்தம் யாது, முத்தியாது என்று சொல்ல வேண்டாம். அகமும் புறமும் என்கிற இவையில் தனக்கும் அனுபவமாகின்றது எதுவோ, அதனிலிருந்து நினைக்கின்ற சகல சங்கற்பங்களும் செடப்பார்த்தால் சேடித்த தனது சொரூபத்தை அகமும் புறமும் இல்லாமல் எவ்விடத்திலும் சுயம்பிரகாசமாய் கண்டு அனுபவிப்பதாகும்.

ஒளியே யெங்கும் விளங்கியிடும்
அவ்வெளி யில்விளங் குமுலகென்பர்
ஒளியே யின்றியு லகுதனக்
கொருகார் முமிலை யதனால்
ஒளியே பனைத்துந் திரைநுரைக
ளுவரிய லதுவே றாமோ
ஒளியே யன்றி வேறாமோ
வொளியை யறியா ருலகென்பர்

சிற்பிரகாசமே எவ்விடத்தும் பிரகாசிக்கும். அந்த சிற்பிராகாசத்தில் பிரகாசிக்கின்ற சர்வ பிரபஞ்சங்களும் சிற்பிரகாசமேயன்றி அன்னியமாகுமோ சிற்பிரகாசத்தை தெரியாதவஞ் ஞானிகள் உலகம் என்று சொல்லுவார்கள். சிற்பிரகாசத்தை தவிர உலகத்திற்கு வேறெதுவுமில்லை. அவ்வனுபவத்தினால் சர்வமும் சிற்பிரகாசமே அலை நுரைகள் சமுத்திரமன்றி அன்னியமாகுமோ.

மாயை வேறென் றெனவுன்னி
மதிக்க வேண்டாம் பேதமதி
மாயை யாகுமற் றஃதைவருந்தி
முயன்று போத்திடுக
மாயை நீங்குமிந் தமதி
வந்தவ ழியேதென வேண்டாம்
மாயை நெறியிலம் மதியை
வதைக்கி லதுவந் துதோன்றும்

மாயை என்பதை வேறு பொருளென்று நினைத்து அளவிட வேண்டியதில்லை பேத புத்தியை மாயை யென்பதாம். அப்போதே புத்தியை வருத்தப்பட்டு முயற்சித்து நீக்கினால் மாயை என்பது கெடும். இப்பேதே புத்தி வந்த வகையாதென்று விசாரிக்க வேண்டுவதில்லை.

சர்கரும மாதிகளால் அப்புத்தியை நசிக்கும் அப்புத்தியானது வந்த வழி தெரியும்.

விளங்கு மெங்குந் தற்சொரூப
விமல வடிவேயென் பதுவும்
விளங்கி வருத்த மொன்றேயாம்
வேறாய்க் காணு மஃதகற்றி
விளங்கு மொளியோ யேகாண்கில்
விளங்கு மருத்த மொன்றாயே

தோற்றப்படுகின்ற இப்பிரபஞ்சமெல்லா மித்தையாரூமே என்று சொல்லுவதும் – எவ்விடத்தும் சொரூபமாகிய மலாகிதமான பிரம்ம சொரூபமே பிரசாசிக்குமென்று சொல்வதும் அனுபவமாயின் ஒரே அருத்தமாம் அன்னியமாய் பார்க்கின்ற அந்தத்துவித் திருஷ்டியை ஒழித்து பிராகாசிக்கின்றதாகவே பார்க்கில் ஒரே அர்த்தமாய் பிரகாசிக்கும்.

தனது சங்கற் பந்தனிலே
　　சகங்களா கிவிளங் கியிடும்
தனது சங்கற் பந்தனிலே
　　சகம்போ யொடுங்கு மதனாலே
தனது வடிவே சகங்களெல்லாக்
　　தன்னை விடவேறிலை தங்கம்
தனது வடிவைவிடப் பணிக
　　டாம் வேறாகி விளங்கிடுமோ

தனது சங்கற்பத்தினாற் பிரபஞ்சங்களாயக் காணப்படும் தனது சங்கற் நாசத்தினாற் பிரபஞ்சம் போயடங்கும் அவ்வனுபவத்தினால் தற்சொரூபத்தையன்றி அன்னிமன்று தங்கத்தின் சொரூபத்தை அல்லாமல் ஆபரணங்களும் அன்னியமாகிப் பிரகாசிக்குமோ.

நிலைமை நீங்கிற் சகமுதித்து
　　நிசமுமாகு மற்ற வையின்
நிலைமை ஞான விசாரணையி
　　னிசம் போயொடுங் குந் தோற்றாவும்
நிலைமை யாகுந் தனைநோக்கி
　　னீங்கி மறையு மிச்சகத்தின்
நிலைமை யொடுவேது விலுதிக்கு
　　நீங்கு மருமை யேதுவினில்

சொரூப ஸ்திதியை யொழிந்தால் உலகந்தோன்றி உண்மையுமாம் அப்பிரபஞ்சத்தின் நிலைமை ஆத்ம

விசாரத்தினாலே நிசமென்பது போயடங்கும் காட்சியும் ஸ்திரமாகிய தற்சொரூபத்தைப் பார்க்கில் மறைந்து போகும். இப்பிரபஞ்சத்தின் நிலைமை ஒரு காரணத்தினால் தோற்றும். இரண்டு காரணத்தினால் ஒழியும்.

ஒரு வேது என்பது சொரூப ஸ்திதியை மறப்பது.

இருமை யேது என்பது விசார ஞானமும் அனுபவ ஞானமும் உள்ளது எனக் கொள்ள வேண்டும்.

எல்லா நாமெப்படி யாவோ
மென்ன வேண்டா மிலக்கணம் பார்த்
தெல்லா நோக்கி யிடுமிடத்தி
லிருப்புந் தோற்றவு மின்பும்
எல்லா விடத்து முண்டாகு
மியல்பு மவையே பிரித்திட்டால்
எல்லா மெங்கே தோன்றியிடு
மிங்கித னாலெல்லா நாமாகும்.

சர்வமும் யாம் எவ்விடத்தில் ஆசி விளங்குவோமென்று சந்தேகிக்க வேண்டுவதில்லை இலட்சணத்தைக் கண்டு சர்வத்தையும் ஏகாரமாக பார்க்குமிடத்தில் சத்தும் சித்தும் ஆனந்தமும் சகல விடங்களிலும் உள்ளதாகும்.

சுபாவமும் அதுகளே அங்ஙனம் பகுத்து நோக்கில் சர்வமும் எவ்விடத்தில் தோற்றும் இவ்வனுபவத்தினால் சர்வமும் நாமேயாம்.

ஒன்றே யென்னின் முத்தியில்லை
யொருவன் வேறே யுண்டென்னில்
ஒன்றே யாக மாட்டான்மற்
றொன்றா மென்னிலொன்று கெடும்
ஒன்றே யென்ற வாதிகட்கு
மோது மிரண்டே யென்றவர்க்கும்
ஒன்றே யிரண்டு மாமொன்றே
யுண்மை கற்பித மிரண்டே

ஏகமே என்றால் மோட்சமில்லை. ஒரு புருடன் பின்னமாக உண்டென்றால் ஒன்றான ஐக்கியம் பேறான ஒன்றாகுமென்றால் ஒன்று நசிக்கும் மித்தியாவாதிகளாகிய வேதாந்திகளுக்கு சொல்லுகின்ற சத்தியவாதிகளாகிய வேதாந்திகளுக்கு சொல்லுகின்ற சத்தியவாதிகளாகிய சைவ சித்தாந்திகளுக்கும் ஓர் வஸ்துவே இரண்டு நிச்சயமுமாம் (ஆதலால்) அத்வைதமே சத்தியம் துவிதமே அசத்தியம்.

விகற்ப மிலது முதற்றோன்றி
விளங்கும் விமல மதியினின்றும்
விகற்ப மதனிற் சகந்தோன்றும்
விண்ணிற் பீலி தோன்றுவபோல்

விகற்ப மதனிற் றோன்வ தொழிந்து
வேறில்லை யெனவே விடுத்ததனை
விகற்ப மின்றியே நோக்கின்
விளங்கும் விமலந் தானாயே

பிரம்மம் நிருவிகற்பமாய்ப் பிரதமத்தில் பிரகாசிக்கும் விகற்பத்தினல் அதன் கண்நின்றும் வானத்தில் மயிற்குஞ்சஞ் தோன்றுவது போல் பிரபஞ்சந் தோற்றும். ஆதலால் விகற்பத்தில் தோற்றுவதை நசித்து அன்னியமன்றென்றுவிட்டு அதை ஓர் விகற்பமில்லாமல் பார்க்குமிடத்துப் பிரம்மம் தன் மயமாகவே பிரகாசிக்கும்.

இந்த விடயமவை வருமின்பும்
பேரின் பத்திருந்தே
வந்த லேசமிட்ட மதுவந்து
கிடைத்த வக்கணமே
அந்த முகமாய் மதிதிரும்பி
யறிவா னந்தங் கணம்புசிக்கும்
அந்த முகமே யெக்காலு
மாகின னைத்து மடைந்ததுமாம்

இந்த நாம ரூபப் பிரபஞ்ச விசயங்களில் வருகின்ற ஆனந்தமும் பேரானந்ததின்ன்று உண்டாகிய அம்சமாம் அஃதெங்ஙனமெனில் ஓர் வஸ்துவின் மேல் இஸ்டம் பிறந்து கிடைக்கப் பெற்ற அந்த கணமே அவ்விஷய முகமாய்ச்

சுகவிருத்தியானது திரும்பித் தனது ஞான சுகத்தை கண நேரம் அனுபவிக்கும் அவ்விஷய முகமேயாய் எப்போதும் விளங்குமிடத்துச் சர்வானந்த திருப்தியும் அனுபவித்ததுவாம்.

விருத்தி யொன்று மில்லாமல்
விளங்கும் நிலையே நாமதனில்
விருத்தி தோன்றின் முற்பினின்றி
விளங்குஞ் செகசீவ பரங்கள்
விருத்தி நீங்கின முப்பொருளும்
விளங்கி டாமற்ற தனாலே
விருத்தி தானே பந்தமதாம்
விருத்தி யொழிவே வீடாகும்.

ஒரு விருத்தியுமின்றிப் பிரகாசிக்கும் நிலையை நமது சொரூபம் அச்சொரூப நிலையில் ஸ்புரணமுண்டாகில் முன்னும் பின்னும் இல்லாமல் ஈசுவர சகத்துக்கள் பிரகாசிக்கும் ஸ்புரண நீங்கினால் மூன்று பொருள்களும் தோன்றாதனவாம் அவ்வனுபவத்தினால் ஸ்புரணமே பெத்தமாம் ஸ்புரண நீக்கமே முத்தியாகும்.

நிருவிகற் பநமதி டத்தினின்று
விகற்ப முதித்தளவில்
ஒருமுப் பொருளு முதித்துவிடு
மொருங்கே மூலவி கற்பமதை
ஒருவி நமது நிலைதோன்று
மொருமுப் பொருளு மதுவாகும்

குருவின ருளினிந் நிலையைக்
கூடவேண் டுநெறி நின்றே

நிர்விகற்பமாகிய நமது சொரூபத்தில் இருந்து விகற்பமானது உண்டான மாத்திரத்தில் ஒப்பற்ற ஈசுவர வாசகத்துக்களும் உண்டாகி விடும். அடியோடு காரணமான விகற்ப நினைவை ஒழித்தல் நமது சுபாவ நிலைமை பிரகாசிக்கும். ஒப்பற்ற அம்மூன்று பொருள்களும் அஃதாகவே விளங்கும் ஞானாசிரியரது கிருபையினால் ஒழுங்கினின்று இந்த சொரூப நிலைமையை அடைய வேண்டும்.

ஏக பரத்திற் றோன்றுலகி
லெங்கும் விடடய மாதலபாம்
ஏக விடயமா தலுயிரிந்த
வுயிர்க்கே முந்தி யினி
ஏக விடய முதற்றள்ளி
யெங்கு மாகும் விடயமதும்
ஏகத் தள்ளி மற்றலகு
மிறக்கிற பண்டைப் படிநிற்கும்

அத்வைதமாகிய பிரம்மத்தில் தோற்றுகின்ற பிரபஞ்சத்தில் சம ஷ்டிவினுடைய மாகின்றது. வியஷ்டி விடையமாகின்றது சீவன். இச்சீவனுக்கே மோட்சம் இதன் மேல் வியஷ்டி விடையமாகிய சீவனை முன்பு நீக்கிச் சமஷ்ட்டி

விஷயமாகிய ஈஸ்வரனையும் போக யொழிந்து சகத்தும் நசித்தல் முன்போல பிரகாசிக்கும்.

எங்கும் விடையமாம் பார்த்துக்
கிருளேக் காலு மிலையாகும்
தங்கமு யிர்க்கே மறதியுண்டாந்
தன்னாற் றளவே கூடிடா
எங்கும் விடையமாம் பரமே
யேக விடையவுயிர் போலத்
தங்கிக் குருவா யெழுந்தருளித்
தள்ளா முயிர்கண் மறதியெலாம்.

சமஷ்டி விஷயமாகிய ஈசுவரனுக்கு அஞ்ஞான மறைப்பு எந்தக்காலத்திலும் இல்லையாகும். பொருந்திய சீவனுக்கு மறைப்பு உண்டாகும். இவ்வனுபவம் தனது வலியினால் சேராதனவாம். சமஷ்டி விஷயமாகிய ஈஸ்வரனே வியஷ்டி விஷயமாகிய சீவனைப் போல ஓர் வடிவு கொண்டு குரு முகூர்த்தமாய் எழுந்தருளி வந்து சீவர்களுடைய அஞ்ஞான மறைப்பெலவாம் ஒழிப்பன்.

மாயை யதனில் மும்முதலும்
வகுப்பாய் விளங்கி யிடுமந்த
மாயை நீங்கிளோ ருமுதலாய்
வகுப்பொன் றின்றி விளங்கியிடும்

ஆய பிரமமொன் றுளதோ
வன்றே யல்லா மாயையுமுன்
டாய பிரம்ம முற்றளவு
மந்த மாயைக் கழிவில்லை

மாயா வல்லபத்தினால் சீவேஸ்வாசகத்துக்குள் மூன்றும் பிரிவாய் பிரகாசிக்கும். அம்மாயையானது விசார ஞானத்தினால் நசிக்கில் பிரம்ம மாத்திரமாய் ஒரு பிரிவுமில்லாமல் பிரகாசிக்கும். ஆகிய பிரம்மமெப்போ தூண்டாயிருக்கின்றதோ, அப்போதே காலத் திரயத்திலுமில்லாத மகாமாயையுமுள்ளது. ஆகிய பிரம்மமென்பதுள்ள பரியந்தமும் அம்மாயைக்கு நாசமில்லை.

இந்த மாயைக் கழிவிலதே
லிந்தவு யிர்க் கொடுக்காலும்
அந்த முத்தியி லையென்னில்
அறையு முயிர் கடமைமறந்த
பந்த நீக்கினக் கணமே
பாமாய் விளங்கு மாயைக்கழிவில்
லதினிலை வீடெனல் கூடா

இந்த மாயிக்கு நாசமில்லையாகில் – இச்சீவனுக்கு ஒருபோதும் அழகிய மோட்சமில்லை யென்றால் சொல்லுகின்ற சீவர்கள் தங்கள் சொரூபத்தை மறந்த மயக்கம் நசிக்கின் அந்தட்சணமே பிரம்மமாய் பிரகாசிப்பார்கள் அதையொழிந்து

இம்மாயைக்கு நாசமின்மையால் மூத்தியின் என்பது கூடாதனவாம்.

தன்னைப் மறைத்துப் பந்தமதைத்
தள்ளி நீங்கிற் றான்விளங்கும்
தன்னை மறந்ததே பந்தந்
தன்னை யறிந்ததே முத்தி
தன்னை விடவோர் பொருளில்லை
தானே பிரம்ம மாயையும் பின்
தன்னை விடவரா விளங்கா
தானேயாகி விளங்கி யிடும்

தற்சொரூபத்தை மறைத்த பந்தத்தை ஒழித்துப் பிரத்தியேகப்படில் தனது சொரூபம் பிரகாசிக்கும். தற்சொரூபத்தை மறந்து விட்டதே பெத்தமாம் தற்சொரூபத்தைத் தெரிந்ததே மோட்சமாம் தற்சொரூபத்தையன்று ஓர் வஸ்துவில்லை. தானே பிரம்ம சொரூபம் மாயை யென்பதும் தன்னையல்லாமல் அன்னியமாய் விளங்காது தற்சொரூபமோயாகி பிரகாசிக்கும்.

தன்னை யறியா வியற்கையினிற்
சத்தே போல விளங்கியிடும்
தன்னை யறிந்த வுடன்சத்தாய்த்
தானே விளங்கு மிவ்வுலகம்

தன்னை யறிவு மளவுமிவை
தன்னை விடவேறி லையெனவே
தன்னை நோக்கி யடினவையுந்
தானாய் விளங்கு முடிவதனில்.

தற்சொரூபத்தை அறியாத சுவபாவத்தில் உள்ளது போல பிரகாசிக்கும் தற்சொரூபத்தை அறிந்த மாத்திரத்தில் இல்லாததாகத் தனக்குத் தானே ஈசுவர சகத்துக்கள் பிரகாசிக்கும். தற்சொரூபத்தை தெரியுமட்டும் ஈஸ்வரசகத்துக்கள் தற்சொரூபத்தை யின்றி அன்னியமன்றென்று தற்சொரூபத்தையே பாவித்துவரில் ஈஸ்வர சகத்துக்களும் தீர்த்த நிலையில் தன் மயமாய்ப் பிரகாசிக்கும்.

இல்லா மாயை தானிந்தேன்
ணிறந்தென் னவைபந்த தமதாகா
இல்லா மாயை தனைமெய்யா
யெண்னு மதியே பந்தமதாம்
இல்லா மாயை தனைப் பொய்யா
யெண்னு மதியே முத்தியதாம்
இல்லா மாயை இல்லையென்றே
யியல்பாய்த் தோன்றுந் தன்னிலையில்

மித்தையான மாயையானது இருந்தா லென்ன நசித்தாலென்ன அம்மாயா தோற்றங்கள் பெத்தமாகாது. மித்தையான மாயையைச் சத்தியமாய் நினைக்கின்ற சித்த

வருத்தியே மோட்சமாம் மித்தையான மாயையானது மித்தையென்றே தற்சொரூபானு பூதி நிலையில் இயற்கையாய்த் தோற்றும்.

நினைவே மூலமாற்ற தனினின்று
　　விரியுமும் முதலும்
நினைவை நீங்கிலவை மூன்று
　　நினைவி லொடுங்க மதனாலே
நினைவே பந்தநினை வொழிவி
　　நிலைமை யான முந்தியுமாம்
நினைவை நீங்கிய னுதினமு
　　நின்ற நிலையே நினறிடுக.

சங்கற்பமே காரணம் அச்சங்கற்பத்தினின்று முப்பொருளும் விகற்பிக்கும் சங்கற்பத்தை நீங்கினால் முப்பொருள்களும் சங்கற்பத்தில் அடங்கும். அவ்வனுபவத்தினால் சங்கற்பமே பெத்தம். சங்கற்ப நாசத்தில் ஸ்திரமான மோட்சமுமாம் சங்கற்பத்தை நீங்கிச் சதாகலாமும் இருந்தபடியே இருக்கக்வடவாய்

நினைவு நீங்கி லுருநாம
　　நீங்கு மவையைத் தள்ளிடினும்
நினைவு நீங்கு மற்றவைய
　　னினக் கேதிச்சை யதின்னிறு

நினைவு நீங்கி நின்றிடமே
நிலைமையான முத்தி யென்னும்
நினைவு கொண்டன் னிலையை
விட்டு நீங்காதென்று நின்றிடுக

சங்கற்பம் நசித்தால் நாமரூபங்கள் நசிக்கும் அவ்வுருவ நாமங்கள் நசித்தாலும் சங்கற்பம் நசிக்கும். அவ்விருவகையில் பியாசித்து சங்கற்ப நாசஞ்செய்து இருந்த நிலையே ஸ்திரமான மோட்சமென்னும் எண்ணங்கொண்டு அவ்வனுபூதி நிலைமையை விட்டொழியாமல் எப்போதும் இருக்கக் கடவாய்.

நினைவை நீக்கி யிடினிமல
சொரூபந் தோன்றி யிடும்
நினைவை மேவி நோக்கியிடி
நிலையிலு லகந் தோன்றியிடும்
நினைவிலுலக மறிந்ததுவு
நீங்கிச் சொரூப மறிந்ததுவும்
நினைவி னோக்கிற் றானில்லை
நிகழுமா யாமோ கமதில்

சங்கற்பத்து நசித்துப் பார்க்கில் நிருமலமாகிய பிரம்மம் தோற்றும். சங்கற்பத்தைப் பொருந்தி பார்க்கில் ஸ்திரி மின்றிய சீவேஸ்வர சகத்துக்கள் தோற்றும். சங்கற்பத்தினால் உலகத்தை தெரிந்ததும் சங்கற்பம் நீங்கிப் பிரம்ம ஸ்வரூபத்தை தெரிந்ததும் கருத்திற் பார்க்கில் அஃதில்லையாம் மாயா மயக்கத்தினால் தோற்றும்.

தனது நிலையிற் றானிருக்கச்
சாற்று மாயா மோகமதில்
தனது வடிவை மறந்துயிர்
போற்றங்கி நீங்கிற் றானிகழும்
தனது வடிவு தோன்றளவுஞ்
சத்தே போல விளங்கியடும்
தனது வடிவு தோன்றளவிற்
றானேய சத்தாய் விளங்கியிடும்.

தற்சொரூப நிலைமையில் தானியிருந்தபடி இருக்கச் சொல்லுகின்ற மாயா மயக்கத்தினால் தற்சொரூபத்தை மறந்து விட்டுச் சீவனைப்போற் பொருந்தில் சொரூபம் நீங்கினால் உலகம் தோற்றும். தற்சொரூபந் தோற்று மட்டும் உள்ளது போல காணப்படும் தற்சொரூபந் தோற்றிய மாத்திரத்தில் தானாகவே இல்லாததாய்க் காணப்படும்.

கான னீருங் கயற்றாவுங்
கட்டை யதனிற்கள் வனுமே
ஆனவவை ஃதிட்டான் மாகு
மன்வக போன்ற ளவும்
ஆனவவை மெய்போற் றோன்று
மதுபோற் சகமு மதிட்டானம்
ஆனசொ ரூபந் தோன்றளவு
மசத்தால் லாதுபோல் விளங்கும்

கானற் சலமும் நச்சு சர்ப்பமும் ஸ்தானுவில் சோரனும் ஆகியவைகள் தமது அதிட்டான ஆகிய பொருள்கள் மட்டும்

ஆகியவைகள் யாதார்த்தம் போல விளங்கும். அத்தன்மை போல பிரபஞ்சமும் அதிட்டான மாகிய பிரம்மம் பிரகாசிக்கும் மட்டும் யாதார்த்தம் போல பிரகாசிக்கும்.

அதிட்டான மது தோன்றளவு
மதுமெய் போல விளங்கியிடும்
அதிட்டான மது தோன்றியபின்
னசத்தே யாகி விளங்கியிடும்
அதிட்டான மது தோன்றளவு
மசத்தென் றெ(ண்)ணியே நோக்கிகற்றி
அதிட்டான மதாந் தனைநோக்கி
லசத்தை யாகி விளங்கியிடும்

அதிட்டானப் பொருள் தோன்று மட்டும். அவ்வாரோப் பொருள் யதார்த்தம் போல் பிரகாசிக்கும் அதிட்டானப் பொருள் தோற்றின. பின்பு மித்தையாகிக் பிரகாசிக்கும். அதிட்டானப் பொருள் தோற்று மட்டும். மித்தையொன்று பாவித்தே அத்திருஷ்டியைக் கெடுத்து அதிட்டானமாகிய தற்சொரூபத்தைப் பார்க்கில் மித்தையாகிப் பிரகாசிக்கும்.

தன்னைச் சீவனெனத் திரிவாய்த்
தானின்று ணர்தல்ஞ் ஞானம்
தன்னைப் பிரம்மமெனத் துணிவாய்த்
முன்னைத் தொடர்ச்சி விடயமது

மூலவரவும் வாத னையும்
　　பின்னை யொருங் கேயொழிந்துவிடும்
பேணல் விடுதலைவை வேண்டா

தற்சொரூபத்தைச் சிதாபாச என்று மாறாகத் தான்றிவது அஞ்ஞானமாகும். தற்சொரூபத்தை பிரம்மமென்று திடமாய்த் தானறிவதே ஞானமாகும் முற்பவத் தொடர்பாகிய விஷயமும் பிரகிருதி வரவும் வாசனையும் பின்பு அடியோய அவ்விரண்டும் வேண்டுவதில்லை.

நிமல நெஞ்சை யுடையோர்க்கு
　　நிலத்திலா சானெ முக்தருளி
விமலத் தோமசி யெனவே
　　விளம்பி லவனுக்கக் கணமே
மும்மல நீங்கிச் சிவம்விளங்கு
　　மோக நெஞ்சை யுடையோர்க்கு
மும்மலச் சார்வாம் வாதனையே
　　மூடி மிகவு நிறைந்திடுமே

சுத்த மனசையுடைவர்களுக்குப் பூமியின் கண் ஆசிரியர் எழுந்தருளி வந்து பரிசுத்தமாகிய அது நீயானாயென்று உபதேசிக்கில் அந்த கணமே மலத்திரயம் நீங்கிப் பிரம்மம் பிரகாசிக்கும். அசுத்த மனசை உடையவர்களுக்கு மும்மலச்சார்காகிய வாசனை மூடி மிகவும் திகரிக்கும்.

எங்கே நிறுத்தினங் கிருக்கு
மியல்பை யுடைய நெஞ்சுடையோர்க்
கிங்கோர் மயக்கங் களுமில்லை
யிச்சை யிறந்த நிலையாகின்ற
அங்கே யாசானெ முந்தருளி
யதுநீயெ னவே யுரைத்தவுடன்
அங்கே சொரூப நாமெனவே
யறுதியாகத் தோன்றியிடும்

எந்த பாவனையில் நிறுத்தினாலும் அப்பாவனை யிற்றானே நிலைத்திருக்குஞ் சுபாவாமாகிய சுத்த மனதையுடைய முமுட்சுகளுக்கு இவ்விடத்தில் ஒரு பிராந்திகளாமின்றாகும். நிராசையுடைய நிலைமையைப் பெற்றால் அவ்விடத்தில் ஆசிரியர் எழுந்தருளி வந்து தத்தோமென்று உபதேசித்தளவில் அவ்விடத்தில் பிரம்மமே கூட ஸ்தமென்று நிச்சயமாகப் பிரகாசிக்கும்.

ஒருவேண் டுமனைத் துமென
வுன்ன வேண்டாம் வினைநீங்கில்
ஒருவு மனைத்தும் வினையுளதே
லொன்றி மேவு மற்றவையே
ஒருவல் பற்றல் வையைவிடுத்
துள்ளபடி யேமுடியு மெனச்
செரூப நாமமே யெனத்திட மாய்ச்
தோற்று மதற்கே முயன்றிடுக

எல்லாம் நீக்க வேண்டுமென்று நினைக்க வேண்டுவதில்லை. பிராரத்தம் நீங்கினால் யாவும் நீங்கும் பிராரத்த உண்டாயிருக்கில் பொருந்தி நிற்கும் அகப்பற்றுகளை நீக்குதல் கொள்ளுதல் ஆகிய அவற்றினை விட்டு உண்டான பிரகாரமே முடியுமென்றும் பிரம்மம் நாயேயென்றும் உறுதியாய்ப் பிரகாசிக்கும் அனுபவத்திற்கே முயலுக.

சொரூப நாமேயெனத் திடமாய்த்
துணிந்த பேர்களில் லறத்தை
மரூவி நீங்கா திருந்திடினு
மற்றோர் குறையு மவர்க்கில்லை
சொரூப நாமேயெனத் திடமாய்
துணியாத வர்களில் லறத்தை
ஒருவி நீங்கினது கொண்டே
யுளதோ முக்திபவ மறுமோ

பிரம்மம் நாமேயென்று உறுதியாய்த் தெளிந்தவர்கள் இல்வாழ்க்கையை பொருந்தி ஒழியாதிருந்தாலும் ஓர் குறைபாடும் அவர்களுக்கு இல்லை ஆகும். பிரம்மம் நாமேயென்று உறுதியாகத் தெளியாதவர்கள் இல்வாழ்க்கையை விட்டுத் துறக்கில் அதனால் மொட்ச உளதோ பிறவி நீங்குமோ.

மருவி யில்லினி ருந்தவர்க்கு
மருவுஞ் சோக மோகமென்னும்
ஒருவித துறவை யடைந்தவர்கட்
கொருவு மென்றுங் கூடாது

சொரூப நாமென் றறிந்தவர்க்கே
சோக மோக மற்றுவிடா
சொரூப நாமென் றறிந்தவர்க்கே
சோக மோக மறவிடும்

இல்லறத்திற் கூடி இருந்தவர்களுக்குச் சோக மோகங்கள் பொருந்துமென்றும் சகலமும் நீங்கித் துறவறத்தை பெற்றவர்களுக்கு நீங்குமென்றும் நினைக்க கூடாது பிரம்மம் நாமே யென்று உணராதவஞ் ஞானிகளுக்குச் சோக மோகங்கள் ஒழியா தனவாம். பிரம்மம் நாமேயென்று உணர்ந்த ஞானிகளுக்கே சோக மோகங்கள் (நசித்து) ஒழிந்து போகும்.

மித்தை யதனைப் பற்றுதலும்
விடவும் வேண்டா மிவ்வுலகை
மித்தை யெனக்கா ணறாதல்போதும்
விட்டு நீங்கு முடனொருங்கே
எத்தை விடுதலை தைப்பற்ற
லென்னிற் சீவத் துவமான
அத்தை விடுக தனைநோக்கு
மதைப் பற்றிடுக நெறியாகும்.

மாயா காரியத்தைக் கொள்ளுதலும் நீங்குதலும் வேண்டுவதில்லை. இந்தப் பிரபஞ்ச இயற்கையை பொய்யென்று பார்ப்பதே போதும் அங்ஙனங்கானில் அக்கணமே அடியோடு ஒழிந்து போகும். ஆயின் எதைத் தள்ளுவது எதைத்

கொள்ளுவது என்றால் சிதாபாசத் தன்மையை விட்டொழிக தன்னையறிவதைக் கொள்ளுக இஃதே மார்க்கமாம்.

இல்ல மென்றுந் துறவென்று
மெண்ணா வேண்டா மற்றவையில்
அல்லல் நீங்கி யொருநினைவா
யசைவற் றிருந்து சொரூபமதைச்
செல்ல விடையூறின் றியதைச்
சேர்ந்து நின்று தன்னிலையே
புல்லா விடையூ றாகுமதைச்
போக்கி விடவே தானும்.

இல்லறமென்றும் துறவறமென்றும் நினைக்க வேண்டாம். அவற்றுள் அலைவின்றி ஒரே மனமாய் அசைவற நின்று பிரம்மத்தை அடைய இடைஞ்சலின்றில்லாத நிலைமையைக்கூடி நின்று தற்சொரூபத்தை அடைய இடைஞ்சலாகு நிலைமையை ஒழித்து விடுவாய்.

விளக்குஞ் சொரூப நோக்காது
விளங்க முலகை நோக்கியிடின்
விளங்குஞ் சொரூபந் தோன்றாது
விளங்குஞ் மூலகே தோன்றியிடும்
விளங்குஞ் சொரூபந் தனைநோக்கி
விளங்கு முலக நோக்கமறின்
விளங்குஞ் சொரூபமே தோன்றும்
விளங்கு மூலக மதுவாய்போம்

பிரகாசிப்பிக்கின்ற பிரம்மத்தை பார்க்காமல் பிரகாசிக்கின்ற பிரபஞ்சத்தைப் பார்க்கில் பிரகாசிக்கின்ற பிரம்ம தோற்றாது. பிரகாசிக்கின்ற பிரம்மமே தோற்றும். பிரகாசிக்கின்ற பிரமத்தை பார்த்து பிரகாசிக்கின்ற பிரபஞ்சத்தின் பார்வை நீக்கில் பிரகாசிக்கின்ற பிரம்மமே பிரகாசிக்கும். பிரகாசிக்கின்ற பிரபஞ்சமும் அதுவேயாகும்.

தன்னை மறைத்த பந்தமதைத்
தள்ளி நீக்கி தனையறியில்
தன்னை விடவோர் பொருளுமின்றி
தானே தானாய் விளங்கியிடும்
தன்னை யறிவு மவ்விளவுந்
தன்னை விடவே றிலையென்றே
தன்னை நோக்கி யொருநினைவால்ச்
சாதித் திடவே மிகவேண்டும்.

தற்சொரூபமதை மூடின பந்தத்தை ஒழித்துத் தற்சொரூபத்தை அறிந்தால், தற்சொரூபத்தையன்றி ஒரு வஸ்துவும் இல்லாமல் தன்மயமாய்ப் பிரகாசிக்கும் சொரூபத்தை தெரியமட்டும் தற்மயமாய்ப் பிரகாசிக்கும் சொரூபத்தை அன்னியமில்லையென்று தற்சொரூபத்தையே பார்த்து ஏக சித்தமாய் மிகவுஞ் சாதிக்க வேண்டும்.

மூலவக் கரமத னில்மூன்றக்
காமு நின்றது போல
நீலவுற் பலமதன் னிறமுன்
மூன்று நின்றது போல
நீலமத னிநோக் கிவிடிற்
சீவன் பரமிச்சக மூன்று
கோல மவையுந் சொரூபமதாய்க்
கூடி நிகழு மொன்றாமே.

ஓங்காரத்தில் அகர, உகர மகரமென்று மட்டசரத்திரயமும் இருந்தது போலும் நீலோற் பலத்தில் நிற முதலாகிய மூன்று தன்மை இருந்தது போலவும் பிரம்ம சொரூபத்தில், பார்க்கும் இடத்தில் இருந்த ஜகஜீவ பரங்ளாகிய விசித்திரயங்களும் பிரம்மமாய் ஏகமாய்ச் சேர்ந்து விளங்கும்.

எல்லா மாகுந் தற்சொரூப
மிருக்கு மளவு மாயைமுன்
டில்லா மாயை யுள்ளளவும்
ஈசன் புரியும் பஞ்சத்தொழில்
இல்லா தொழிந்து பாவதில்லை
யதனாற் சீவ பரமுண்டு
சொல்லா நின்ற விவர்க்குச்சரி
சொரூபந் தானே பகுத்துநிற்கும்

சர்வமும் ஆகின்ற பிரம்ம சொரூபம் இருக்கும் மட்டும், மாயையும் உள்ளது. இல்லா மாயை இருக்குமட்டும் ஈஸ்வரன்

செய்கின்ற பஞ்ச கிருத்தியங்கள் இல்லாமல் நீங்கிப் போவதில்லை இவ்வகையானால் சீவபரங்களுண்டு, சொல்லுகின்ற இச்சீவேசுவரகளுக்குச் சாட்சியாகச் சொச் சொரூபமே கூட ஸ்தன் பிரம்மமென பருத்துப பிரகாசித்து நிற்கும்.

பகுத்த நின்ற தற்சொரூபம்
பரசீவ ருக்கச் சாஷியதாய்ப்
பகுத்து நிற்குஞ் சாட்சியையே
பார்த்து தத்தோ மசியென்று
வகுத்து மாவாக் கியங்கூறு
மற்றிச் சீவன் றனையல்ல
தொகுத்து கேட்பதிவ னெனினுஞ்
சொன்ன திவன்சாட் சியைப் பார்த்தே.

பிரித்து நின்ற பிரம்ம ரொசரூபம் சீவேஸ்வரககளுக்குச் சாட்சியாக பிரிந்து விளங்கும் கூடஸ்தனையே ஆசிரியர் பார்த்து அது நீயானா என்று பிரித்து மகாவாக்கியத்தை உபதேசிப்பார். இந்த சீவனைப் பார்த்தல்ல அடுத்துக் கேட்டது இச்சீவனென்றாலும் சீவ சாட்சியாக கூடஸ்தனைப் பார்த்தே உபதேசித்ததாம்.

இந்தச் சீவன் கற்பிதமே
யின்றி வேறோர் பொருளல்ல
அந்தச் சொரூப மிவனாகா
னந்தச் சாட்சி யென்றாகும்

இந்தச் சீவனது நாமென்
றெண்ணி சோகம் பாவிக்க
அந்த சொரூப மாயிடுவ
னவனை விடவேறி வனிலதின்

இச்சீவன் ஆரோபிதமே அன்றி வேறொரு வஸ்துவல்ல. அப்பிரம்ம ஸ்வரூபம் இச்சீவனாகான் அக்கூடஸ்தன ஐக்கியமாவன். இச்சீவன் பிரம்மமே கூடஸ்தனென்று நினைந்து சோகம் பாவனை செய்ய அப்பிரம்ம சொரூபமே தானானவன் அப்பிரமத்தையன்றி அன்னியமாய் இக்கூடஸ்தன் இல்லாமையால் சீவேசுராகளுக்கு அயிர்க்கமின்றெனவும் பிரம்ம கூடஸ்தறாக்கே ஐக்கிய முண்டைனவுங் கூறியனதாம்.

இதனாற் பந்த முத்தியுமுன்
டிதனாற் பந்த முத்தியுமின்
றிதனாற் பலவே யாகியிடு
மிதனா யொன்றே யாகமெனும்
இதனால விநோத மதாத
மிதுவே நமது சிந்தாந்தம்
றிதனாற் முத்தி பெற்றவனுள்
டிதனான் முத்தி பெற்றவனின்

இவ்வகையில் பெற்ற முத்திகளுமுண்டு இவ்வகையால் பெற்ற முத்திகளுமில்லை, இவ்வகையால் முத்தி அடைந்தவனில்லை. இவ்வகையால் நானாவாகும் இவ்வகையில்

ஏகமேயாகும் என்று உபனிஷத்துக்கள் சொல்லும் இவ்வகையால் வினோதமின்மையாம் இம்மார்க்கமே நமது நிச்சயமாம்.

இந்த நெறியில் லுதினமும்
 ஏகாந்தத் திலொரு நினைவாய்
பந்த முத்தி மார்க்கமதை
 பகுத்து வந்த வழிபடியே
ஏதாந்த மகற்றிப் பழையபடி
 சொரூப மதனி னின்றியென்
இந்த வகையே யருள்புரிந்தா
 ளெனை யாள்வகுத்த வம்பிகையும்

இம்மார்க்த்தில் சதாகாலமும் ஏகாந்த ஸ்தானத்திலிருந்து ஏகசித்தமாய் பெற்ற முத்தி வழிகளைப் பிரித்து உண்டான சிரமப்படியே தொடர்ச்சியை ஒழித்து முன்னிருந்தது போல் பிரம்மத்தில் நிற்பாயென்று இவ்விதமாக என்னை அடிமைக் கொண்ட அருளி பெரிய நாயகியம்மைத் தாயாரும் கிருபை செய்தருளினாள்.

கோர்த்துப் பத்துத்தி சைகளினுங்
 குலவும் பதினாலு லகத்தும்
பார்த்த நோக்கு மிடமெல்லாம்
 பரமே நிற்க யானவமாய்க்
கூர்ந்து நோக்கிப் பாராது
 கொடுமை களிலே நாட்கழித்தேன்
ஈர்த்து விருத்த வம்பிகைநின்
 றிந்தோ வென்றாள் யான்கண்டேன்

நிறைந்துப் பத்துதிக்குகளிலும் பொருந்திய பதினான்கு உலகத்திலும் பார்க்கும் இடங்கள் தோறும் பிரம்மமே பிரகாசித்திருக்க நான் விருதாவக கூர்ந்து விசாரித்துப் பாராமல் தீமைகளில் வாணாளைக் கழித்தேன் பெரிய நாயகியார் என்னையிழுத்து இதோ பாரென்றனுக்கிரகஞ் செய்தனள், நான் கண்டறிந்தேன்.

கொக்கு மிரைத்தே ருதலினறாட்
குருகி னருளியா னோக்கத்
திக்கு லோகமென்ற தெல்லாந்
தெரிய வேண்டி யுரைத்ததுவாய்த்
திக்கு லோகமும் மிறந்து
தேரு மியானு மிறந்ததுவாம்
ஒக்கு முவமை யில்லாத
வொளி யாயெங்கு நிறைந்தததுவே

கொக்கு இரை தேடுவது போல குருகிருபையினால் நான் பார்த்தளவில் திசைகளாலகளென்னுஞ் சகலமும் அறிய வேண்டி உபதேசித்து போலாகித் திசைகளும், மூலகங்களும் கரைந்து அறிகின்ற தற்போதமுங் கரைந்து பிரம்ம சொரூபமாகிச் சமான இதமான சுயம் பிரகாசமாம் எவ்விடத்தும் பரிபூரணமாகப் பிரகாசித்தது.

அந்தோ வக்தோ வாளாவிவ்வனு
　　பூதி யினை யறியாது
வெந்தோர் மயக்கில் கப்பட்டு
　　வீணானா ளைக் கழித்துவிட்டேன்
இந்தோ பாரென்ற றாட்சத்தி
　　யெனக்குங் காட்ட நான்கண்ட
சந்தோ டத்தைச் சொல்லப்படுமோ
　　தானே தானின்ற றிவதுவே

ஐய்யோவை யோவிருதாவில் இச்சுவானு பூதிப் பிரத்தியட்சத்தை அறியாமல் கரிந்து ஓர் மேகத்தில் சிக்கி வீண் செய்கைகளில் வாணாளைப் போக்கிவிட்டேன். இதோ பாரென்று சிற்சித்தியாகிய பெரிய நாயகியார் அடியேனுக்கும் தரிப்பிக்க நான் தரிசித்து அனுபவித்த ஆனந்தத்தைச் சொல்லக்கூடுமோ தானேதானாயிருந்து தெரிகின்றதாகும்.

எந்த னுடைய சரித்திரங்க
　　ளெனக்கே நகைவந் திடுநினைக்கில்
இந்தக் குறைகள் பாராம
　　லெனையும் வலிதிற் பிடித்திழுத்துப்
பந்த முத்தி விவகாரம்
　　பறித்தே யறிந்து பழையபடி
அந்த வெனது நிலையில் வைத்து
　　வன்னைக் கெனையோள் கம்மாறே

யோசிக்கில் என்ற வரலாற்றுகள் எனக்குத் தானே சிரிப்பாணிரு வரும் இக்குறைபாடுகளை ஆராய்ந்து பாராமல் அடியேனையும் பலாத்காரமாகப் பத்தியிழுத்துப் பந்த மோட்ச விவகாரங்களை ஒழித்துத் தள்ளி முன்னிருந்தது போல அழகிய என் சொரூப சுபாவ நிலைமையில் இருக்க செய்த தாயுக்கு யான் செய்யும் பிரதியுபகாரம் யாது.

எனது வடிவை யறியாம
லிந்த வுயிராய் நின்றதுவும்
மனது மிகவும் வாடினதும்
வாழிகா ணாமலேங் கினதும்
தனது கணிற்றோன் றிடுநெருப்பிற்
றறாவே வதுபோல் வெந்ததுவும்
தனது கடைக்கண்ணா லொழித்த
தாய்கு மெனையோ கைம்மாறே

என் சொரூப சுபாவத்தை உணராமல் இச்சீருவனாயிருந்தும் மனம் மிகுதியும் வருந்தினதும் மார்க்கம் அறியாமல் ஏக்கங் கொண்டதும் தன்னிடத்தில் உண்டாகின்ற அக்கினியால் விருட்சம் எரிந்து போவது போல எரிந்ததும் தனது கடாட்ச வீட்கண்ணியத்தினால் நீக்கிய மாதாவுக்கும் யான் செய்யும் பிரதியுபகாரம் யாது.

என்னை யறியா திதுவரையு
மேங்கி யுழன்று கிடப்போற்க்குத்
தன்னை நிகராம் விருத்தகிரி
தங்கு முமையே தயவாகிப்
பின்னை யானுந் தானுமொன்றாம்
பிரம்மந் தனையே யறிவித்து
முன்னை மயக்கஞ் தனைக் கொடுத்த
முதல்விக் கெனையோ கைம்மாறே

என் சொரூபத்தை தெரியாமல் இன்னாள் வரையிலும் ஏக்கமுற்று அலைந்து கிடக்கின்ற எனக்குத் தனக்கு தானே சமானமாகிய பழமலையின் கண் வசிக்கின்ற பெரிய நாயகியாரே கிருபை கூர்ந்து அருளி பிற்பாடு கூடஸ்த பிரம்மாயிக்கிய ஆகின்ற அத்துவிதப் பிரம்மத்தையே தெரிவித்து முன்புள்ள மோகத்தை நசிப்பித்த அருளினாள். அங்ஙனஞ் செய்தருளிய முதல் வியாருக்கு நான் செய்யும் பிரதியுபகாரம் யாது.

எழிலார் விருத்தா சலவடிவா
மெந்தை வாழ்க வெனையாளும்
எழிலார் விருத்த வம்பிகையு
மென்றும் வாழ்க வெனக்கருளும்
எழிலார் பிரணவ மும்வாழ்க
வென்றா யருளை நோக்கியிடும்
எழிலார் டியார்க ளும்வாழ்க
வெனைப் போலெல் லோர்களும் வாழ்க

அழகு பொருந்திய விருத்த கிரி சொரூபமாகிய எமது பிதாவான பரமசிவன் வாழ்க்கவது என்னை அடிமை கொண்ட அழகு பொருந்திய பெரிய நாயகித் தாயாரும் எப்போதும் வாழக்கூடாது எனக்கு அனுக்கிரகித்த அருளின அழகு பொருந்திய பிரணவ மந்திரமும் வாழக்கடவது எனது மாதாவாகிய பெரிய நாயகியாரது கிருபையை நோக்குகின்ற அழகு பொருந்திய திருத்தொண்டர்களும் வாழக் கடவது என்போல சகல மானவர்களும் வாழக்கடவது.

ஏருரும் விருத்த கிரிக் குமாரதே
வெனுமுனி வனிசைக் நாவாய்க்
காருரும் பழமலை யிற்பெரியநாயகி
யிருந்தே கழறு மிந்தச்
சீருருமத் துவிதவுண் மையனுபவ
முணர்ந் தோர்திகழ பாரென்னுக்
தேருருஞ் சிவனா னைமுத்திபெற
லுண்மை யிதுதிண் ணந்தானே

அழகு பொருந்திய பழமலையின் கண்ணெழுந் தருளியிருந்த ஸ்ரீகுமார தேவரென்னும் நாம தேயத்தை உடைய முனீஸ்வரரது சொல்லுகின்ற நாவினிடத்து மேகந் தவிழுகின்ற விருத்தாசலத்தி எழுந்தருளி விளங்குகின்ற பெரிய நாயகிதாயார் வீற்றிருந்து சொல்வித் தருளிய இந்தச் சிறப்பை உடைய அத்துவித உண்மை என்றும் நூலின் அனுபூதியை அறிந்து பெரியோர்கள் பிரகாசிக்கின்றனர்.

## பாடல் முதற் குறிப்பு அகர வரிசை


| | | |
|---|---|---|
| 1. | அகிலந்தோன்றும் | 37 |
| 2. | அதிட்டடானமது | 77 |
| 3. | அந்தோ | 97 |
| 4. | அரையகு மாரன் | 35 |
| 5. | அனந்த விதமாய் | 12 |
| 6. | ஆண்ட குருவே | 2 |
| 7. | இதனாற் பந்த | 92 |
| 8. | இந்த (68), (62), (93), | 91 |
| 9. | இல்லமென்று | 85 |
| 10. | இல்லா மாயை (39) | 71 |
| 11. | இன்னா னன்னா | 9 |
| 12. | உண்யாய் தோன்றி | 4 |
| 13. | உருவ நாம (43), (50), | 52 |
| 14. | உறக்கமோக | 22 |
| 15. | ஊனா | 32 |
| 16. | எங்கே நிறுத்தி | 80 |
| 17. | எந்த (5) | 98 |
| 18. | எல்லா (6), (40), (59), | 89 |
| 19. | எழிலார் | 100 |
| 20. | எனது வடிவை | 98 |

| | | |
|---|---|---|
| 21. | என்னை அறியா | 99 |
| 22. | ஏகமாகி | 27 |
| 23. | ஏருரும் | 1013 |
| 24. | ஒளியே | 54 |
| 25. | ஒருவனுள தாகை | 23 |
| 26. | ஒருவ வேண்டும் | 84 |
| 27. | ஒன்றே யென்னின் | 60 |
| 28. | கடங்கட | 29 |
| 29. | கனவிகனவே | 14 |
| 30. | கனவிற் | 17 |
| 31. | கனவை (15), (20), | 21 |
| 32. | கானனீரு | 76 |
| 33. | கொக்கு | 96 |
| 34. | கொள்ளா | 53 |
| 35. | கோர்த்து | 95 |
| 36. | சகம தென்பதி | 47 |
| 37. | சிங்காதனத்தில் | 19 |
| 38. | தங்கந்தானே | 8 |
| 39. | தனது (75), | 57 |
| 40. | தன்னை (69), (70) (78), | 87 |
| 41. | தானுங் | 10 |

| | |
|---|---|
| 42. தோன்றி (26) | 49 |
| 43. நனவிற் | 16 |
| 44. நாகத்துதிக்கை | 31 |
| 45. நாமரூபந்தனை | 34 |
| 46. நாமரூப | 42 |
| 47. நானாவாகத் | 7 |
| 48. நிமல நெஞ்சை | 79 |
| 49. நிருவிகற் | 64 |
| 50. நிலைமை | 58 |
| 51. நினைவு | 73 |
| 52. நினைவே | 72 |
| 53. நினைவை | 74 |
| 54. படிகந்தடுத்த | 24 |
| 55. படியிற் பொருளின் | 36 |
| 56. பந்தத் (48) | 51 |
| 57. பரவை | 28 |
| 58. பகுத்து | 90 |
| 59. பழுதைய | 25 |
| 60. பொங்கா | 1 |
| 61. மரத்தை | 30 |
| 62. மனத்திற் | 18 |

63. மருவியில் 83

64. மந்தவிருளிற் 11

65. மாயை (33) 35

66. மித்தியவாதி 46

67. மித்தையதனை 84

68. முத்தி 38

69. மூலவக்கர 88

70. மேலாந் 3

71. மையே 13

72. விகற்மிலது 61

73. விவகார 44

74. விளக்கு 86

75. விளங்கு 56

76. விருத்தி 63.